விலை : ரூபா 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM

நாதம் 01 | சுக்கில ஞூ பங்குனி மீ 14-ம் உ | செவ்வாய்க்கிழமை | (27 - 03 - 1990) | ஹிஜ்ரி 1410 | ஷஃபா 29 | ஓசை 37

## விண்ணப்பித்த ஏழு நாட்களுக்குள் கடவுச்சீட்டுக் கிடைக்குமாம்!

(கொழும்பு)

சட்வுச்சீட்டுக்கு விண்ணப்பித்து ஒரு வாரத்துக்குள் கடவுச்சீட்டுக்கள் வழங்குவதற்கு குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் ஏற்பாடுகள் செய்திருக்கிறது. கடவுச்சீட்டுக்கள் வழங்குவதில் மோசடியும் ஊழல்களும் நிலவுவதாகத் தெரிவிக்கப்பட்ட புகார்களைத் தொடர்ந்து ஜனாதிபதி பிரேமதாசா விடுத்துள்ள பணிப்புரையை அடுத்தே ஏழு நாட்களுக்குள் கடவுச்சீட்டு வழங்குவதற்கு குடிவரவு குடியகல்வு இலாகா ஒழுங்கு செய்திருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. கடவுச்சீட்டுக்கள் எடுப்பதில் வெளிநாட்டுப் பிரயாண முகவர்களுக்கும் குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தைச் சேர்ந்த ஊழியர்கள் சிலருக்கும் நெருங்கிய தொடர்பு இருந்து வருவதாகவும் இதுவே கடவுச்சீட்டுக்கள் உரிய காலத்தில் கிடைக்க முடியாமலிருப்பதாகவும் செய்திகள் வெளிவந்தது தெரிந்ததே.

## இந்தியப்படை வெளியேறியதும்

# திருமலையில் கலகம் வெடிக்கும் என்பது பொய்த்து விட்டது!

## இந்த அமைதி நீடிப்பது அரசைப் பொறுத்தது

### திருமலை விடுதலைப் புலிகள் பொறுப்பாளர் றூபன் கருத்து

(திருக்கோணமலை)

இந்திய இராணுவம் திருக்கோணமலையிலிருந்து வெளியேறியதும் தமிழ் மக்களுக்கும் சிங்கள மக்களுக்குமிடையில் பெரும் மோதல் ஏற்படுமென்ற பீதியைச் சிலர் கிளப்பிவிட்டிருந்தார்கள். இந்திய ராணுவம் வெளியேறியதும் அப்படி எதுவும் நடைபெறவில்லை. எந்தச் சமூகத்துக்கும் விடுதலைப் புலிகள் எதிரானவர்கள் அல்லர் என்பதை நாம் நடைமுறையில் காண்பித்தோம். தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் அன்பாகப் பழகுகின்றனர். இந்த ஐக்கியமும் நேசமும் நீடிப்பது இலங்கை அரசின் நடவடிக்கையைப் பொறுத்திருக்கிறது.

இவ்வாறு திருக்கோணமலை மாவட்ட விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி அரசியல் பொறுப்பாளர் திரு. றூபன் 'ஈழநாதம்' சிறப்பு நிருபருக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.



விடுதலைப் புலிகள் திருக்கோணமலை நகருக்குள் பிரவேசிக்கும் போது ஒரு பதட்டமான நிலை இருந்தது இந்தியஇராணுவம் கட்டம் கட்டமாக வெளியேறத் தொடங்கியதும், ஈ. பி. ஆர். எல் எவ் ஒரு புதுமையான பிரச்சாரத்

செல்ல இக் கருத்துத் தோற்கடிக்கப்பட்டு, கருத்துப் போலியானது என்று வெளியாயிற்று நாங்கள் எந்த ஒரு இனத்துக்கும் எதிரானவர்கள் அல்ல என்பதை எமது செயல்

நிரூபித்தது. அத்துடன் உயர் அதிகாரிகள் எங்களுடன் கலந்துரையாடி, சிங்கள அதிகளுடன் கதைத்து, சிவில் நிர்வாகத்தை மறுசீரமைப்புச் செய்து கொண்டிருக்கிறார்

கள் எங்களுடைய நல்ல திட்டங்கள் சிங்களவர்களைக்

(6ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப் புலிகள் உறுப்பினர் மூளைக் காச்சலுக்குப் பலி

(தீவுப்பகுதி)

மூளைக்காய்ச்சல் நோயினால் மரணமடைந்த தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினரும், காரைநகரைச் சேர்ந்தவருமான விசைவீரன் அவர்களின் மரணச் சடங்குகள் காரைநகர் அல்வின் வீதியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றது. சடங்குகளின் முன்னர் அவரது பூதவுடல் பொதுமக்களின் அஞ்சலிக்காக காரைநகர் பிரதேசசபை மண்டபத்தில் வைக்கப்பட்டிருந்தது. பின்னர் அவரது சடலம் காரைநகர் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்பட்டது.

இவ்விறுதிச் சடங்கில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தீவுப்பகுதி பொறுப்பாளர்கள் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினார்கள். மரணச் சடங்கை முன்னிட்டு காரைநகர் சோகமயமாக காட்சியளித்தது. எங்கும் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தது. (15)

## சிரமதானமும் அன்ன தானமும்

(யாழ்ப்பாணம்)

அன்னை பூபதியின் நினைவாக யாழ். பல்கலைக் கழக மறுமலர்ச்சிக் கழகம் ஏற்பாடு செய்துள்ள சிரமதான வைபவம் இன்று காலை 9 மணியளவில் கைதடி முதியோர் இல்லத்தில் நடைபெறவுள்ளதாகவும் அங்குள்ள முதியோர்களுக்கு மதிய போசனம் வளங்க ஒழுங்குகள் செய்துள்ளதாகவும் கழக வட்டாரங்கள் தெரிவித்தன.

## பணம் இன்மையால் வீதித் திருத்தம் இடைநிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

மாநகரசபைக்கு வங்கிகளில் ஒதுக்கிவைக்கப்பட்டிருந்தமீதி பணத்திலிருந்து புணருத்தாரண வேலைகள் செய்யப்பட்டு வந்தன. தற்போது அந்த தொகையும் தீர்ந்துவிட்டதால் வீதிவேலைகள் ஸ்தம்பித்துள்ளதாக மாநகர வேலைப்பகுதி அதிகாரி ஒருவர் தெரிவித்துளளார்.

மாநகரசபைக்கு நிதி பெற்றுத் தருவது சம்பந்தமாக திருக்கோணமலையில் மாகாணசபை உள்ளூராட்சி ஆணையாளரை சந்திக்கவென பிரதிநிதி ஒருவரை இந்தக் கிழமையளவில் அனுப்பி வைக்கவுள்ளதாக, இவ்விடயப்பற்றி அரசாங்க அதிபர் கருத்து தெரிவித்துள்ளார்.

அத்துடன் தாம் இவ்விடயம் குறித்து விசேட கவனம் செலுத்துவதாகவும் அவர் உறுதி அளித்துள்ளார். (லோ)

## எரிபோருளைச் சேமிக்க போதியகோள்கலன்கள் இல்லை

(யாழ்ப்பாணம்)

போதியளவு எரிபொருளை இதனால் தற்போதைக்கு பாதையோர எரிபொருள்

## ஜிகாத் உறுப்பினர் குண்டுகளுடன்கைது

(திருக்கோணமலை)

மூதூர் இறங்கு துறையில் சிகரெட் கொள்ளையில் ஈடுபட்ட இருவர் விடுதலைப் புலிகளினால் மடக்கிப் பிடிக்கப்பட்டனர். இவர்களிடம் கைக்குண்டுகளுமிருக்கக் காணப்பட்டன. இவர்களிருவரும் ஜிகாத் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்று தெரிய வந்திருக்கிறது

நேற்று முன் தினம் மூதூரில் ஜிகாத் அமைப்பைச் சேர்ந்தவரிடம் ஒரு பிஸ்டலும் இருபது ரவ்வைகளும் கைப்பற்றப்பட்டதும் குறிப்பிடத்தக்கது

## திருமலைகிராமங்களில் அன்னை பூபதிக்கு நினைவஞ்சலி

(திருக்கோணமலை)

அன்னை பூபதி கணபதிப்

## வீதித் திருத்தம் இடைநிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

மாநகரசபைக்கு வங்கிகளில் ஒதுக்கிவைக்கப்பட்டிருந்தமீதி பணத்திலிருந்து புணருத்தாரண வேலைகள் செய்யப்பட்டு வந்தன. தற்போது அந்த தொகையும் தீர்ந்துவிட்டதால் வீதிவேலைகள் ஸ்தம்பித்துள்ளதாக மாநகர வேலைப்பகுதி அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

மாநகரசபைக்கு நிதி பெற்றுத் தருவது சம்பந்தமாக திருக்கோணமலையில் மாகாணசபை உள்ளூராட்சி ஆணையாளரை சந்திக்கவென பிரதிநிதி ஒருவரை இந்தக் கிழமையளவில் அனுப்பி வைக்கவுள்ளதாக, இவ்விடயப்பற்றி அரசாங்க அதிபர் கருத்து தெரிவித்துள்ளார்.

அத்துடன் தாம் இவ்விடயம் குறித்து விசேட கவனம் செலுத்துவதாகவும் அவர் உறுதி அளித்துள்ளார். (லோ)

இந்திய இராணுவம் திருக்கோணமலையிலிருந்து வெளியேறியதும் தமிழ் மக்களுக்கும் சிங்கள மக்களுக்குமிடையில் பெரும் மோதல் ஏற்படுமென்ற பீதியைச் சிலர் கிளப்பிவிட்டிருந்தார்கள். இந்திய ராணுவம் வெளியேறியதும் அப்படி எதுவும் நடைபெறவில்லை. எந்தச் சமூகத்துக்கும் விடுதலைப் புலிகள் எதிரானவர்கள் அல்லர் என்பதை நாம் நடைமுறையில் காண்பித்தோம். தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் அன்பாகப் பழகுகின்றனர். இந்த ஐக்கியமும் நேசமும் நீடிப்பது இலங்கை அரசின் நடவடிக்கையைப் பொறுத்திருக்கிறது.

இவ்வாறு திருக்கோணமலை மாவட்ட விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி அரசியல் பொறுப்பாளர் திரு. றூபன் 'ஈழநாதம்' சிறப்பு நிருபருக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் திருக்கோணமலை நகருக்குள் பிரவேசிக்கும் போது ஒரு பதட்டமான நிலை இருந்தது இந்தியஇராணுவம் கட்டம் கட்டமாக வெளியேறத் தொடங்கியதும், ஈ. பி. ஆர். எல் எவ் ஒரு புதுமையான பிரச்சாரத்தைச் செய்து தவறான கருத்தையும் மக்கள் மத்தியில் ஏற்படுத்தியது

இந்திய இராணுவம் போனதும ஒரு சிங்கள தமிழ்க் கலவரம் ஏற்படக் கூடும் என்ற கருத்து நிலவியது. நாளும் பொழுதும் செல்லச் செல்ல இக் கருத்துத் தோற்கடிக்கப்பட்டு, கருத்துப் போலியானது என்று வெளியாயிற்று நாங்கள் எந்த ஒரு இனத்துக்கும் எதிரானவர்கள் அல்ல என்பதை எமது செயல் நிரூபித்தது. அத்துடன் உயர் அதிகாரிகள் எங்களுடன் கலந்துரையாடி, சிங்கள அகதிகளுடன் கதைத்து, சிவில் நிர்வாகத்தை மறுசீரமைப்புச் செய்து கொண்டிருக்கிறார்



கள் எங்களுடைய நல்ல திட்டங்கள் சிங்களவர்களைக்

(6ஆம் பக்கம் பார்க்க)

மடக்கிப் பிடிக்கப்பட்டனர். இவர்களிடம் கைக்குண்டுகளுமிருக்கக் காணப்பட்டன. இவர்களிருவரும் ஜிகாத் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்று தெரியவந்திருக்கிறது

நேற்று முன் தினம் மூதூரில் ஜிகாத் அமைப்பைச் சேர்ந்தவரிடம் ஒரு பிஸ்டலும் இருபது ரவ்வைகளும் கைப்பற்றப்பட்டதும் குறிப்பிடத்தக்கது

## எரிபொருளைச் சேமிக்க போதியகோள்கலன்கள் இல்லை

(யாழ்ப்பாணம்)

போதியளவு எரிபொருளை சேமித்து வைப்பதற்கு கொள்கலன வசதிகள் தற்போது வடபகுதி எரிபெருள் கூட்டுத்தாபனத்திட்டம் இல்லாமையால் இரண்டு நாட்களுக்கு எரிபொருள் ரயில் வராது விடுமிடத்து மீண்டும் எரிபொருள் தட்டுப்பாடு நிலவும்.

இதனால் தற்போதைக்கு பாதையோர எரிபொருள் விற்பனையாளர்களை தடை செய்ய முடியாது. அப்படி தடைசெய்யுமிடத்து மக்களின் எரிபொருள்கள் தேவையை பூர்த்தி செய்வதில் பல சிரமங்கள் ஏற்படும் என யாழ். மத்திய பெற்றோலிய கூட்டுத்

(6ஆம் பக்கம் பார்க்க)

## வாழைச்சேனை மீன்பிடித்துறை அரச அச்சகக் கிளை அபிவிருத்தி

### மட்டக்களப்பு மாவட்டத்தின் முதல் வேலை என்கிறார் புதிய அரச அதிபர் யோகா

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் சில வருடங்களுக்கு முன்பு ஆரம்பிக்கப்பட்டுக் கைவிடப்பட்ட நிலையிலுள்ள வாழைச்சேனை மீன்பிடித்துறை அபிவிருத்தி, அரசாங்க அச்சகத்தின் மட்டக்களப்புக்கிளை, நெற் சந்தைப்படுத்தும் சபையின நெல்ஆலைத் தொகுதி, வேப்பவட்டுவான் ஓட்டுத் தொழிற்சாலை ஆகியவைகளைத் தொடர்ந்து நிறைவேற்றுவது தான் தமது முதல் நடவடிக்கை என்றும் இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளதாகவும் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திரு.ஆர். யோகநாதன்நேற்று ''ஈழநாதம்'' நிருபரிடம் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவது மட்டுமல்ல வேலைவாய்ப்பளிப்பதற்கான புதிய திட்டங்கள் ஆரம்பிக்கப்பட விருப்பதாகவும் பழைய திட்டங்களை நிறைவேற்றுவதே முதல் முக்கிய கடமையாக இருக்குமென்றும் அரசாங்க அதிபர் யோகநாதன் மேலும் சொன்னார்.

## திருமலைகிராமங்களில் அன்னை பூபதிக்கு நினைவஞ்சலி

(திருக்கோணமலை)

அன்னை பூபதி கணபதிப்பிள்ளையின் நினைவஞ்சலி நிகழ்ச்சிகள் திருக்கோணமலை, மூதூர்ப்பகுதிக் கிராமங்கள் தோறும் தம்பலகாமப்பகுதி எங்கும் நடைபெற்று வருகின்றன.

ஊர்வலங்கள், பிரார்த்தனைகள், பொதுக் கூட்டங்கள், அன்னை பூபதியின் உருவப்படத்திரை நீக்கம் ஆகியவை நடைபெற்று வருகின்றன.

## இந்திய இராணுவம் வெளியேறினும் அதன்மேலாதிக்கம் அற்றுப்போகாது

(யாழ்ப்பாணம்)

இந்திய இராணுவம் நமது நாட்டைவிட்டு வெளியேறிச் சென்றுள்ள போதிலும் இந்திய மேலாதிக்க சக்திகளின் உள்ளார்ந்த எண்ணங்களும், செயற்பாடுகளும் அற்றுப்போகாது என இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது)யின் பொதுச் செயலாளர் சி. கா. செந்திவேல் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலை கோட்டை அகதிகள் புலிகள் இன்று சந்திப்பு!

### நேற்று ஊழியர் வேலைக்குச் சென்றனர்

(திருக்கோணமலை)

திருக்கோணமலை பிரட்றிக் கோட்டைக்குள் இருக்கும் சிங்கள அகதிகளை மீளக் குடியமர்த்துவது சம்பந்தமாக இன்று செவ்வாய்க்கிழமை அகதிகள் குழுவொன்றுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் பேச்சுவார்த்தை நடைபெறவிருக்கிறது. இப்பேச்சுக்களில் திருக்கோணமலை அரசாங்க அதிபர், இராணுவத் தளபதி, பொலிஸ் அதிபர் ஆனந்தராஜன் ஆகியோரும் கலந்து கொள்வார்களெனறு எதிர் பார்க்கப்படுகிறது. விடுதலைப் புலிகள் தரப்பில் திருக்கோணமலை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. றூபன் கலந்து கொள்வார்.

**ஊழியர் வேலைக்குச் சென்றனர்**

கடந்த சில வருடங்ளாகவே பிரட்ரிக் கோட்டைக்குள் இருக்கும் அரசாங்க செயலகத்துக்கும் மற்றும் அரசாங்க அலுவலகங்களுக்கும் வேலைக்குச் செல்லாதிருந்த ஊழியர்களும் உத்தியோகத்தர்களும் நேற்று வேலைக்குச் சென்றனர். எந்தவித சம்பவமும் இல்லாமல் நகரம் அமைதியாக இருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## புனர்வாழ்வு மதிப்பீடுகள் கொழும்புக்குச் சென்றன

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில்கடந்த காலத்தில் ஏற்பட்ட வன்செயல்களினால் ஏற்பட்ட அழிவுகளுக்கான புனர்வாழ்வு மதிப்பீடுகள் செய்யப் பட்டு அதற்கான அறிக்கை திருக்கோணமலைக்கும், கொழும்புக்கும் அனுப்பப் பட்டுள்ளதாக அரசாங்க அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் தெரிவிக்கிறார்.

நேற்று அவர் பத்திரிகையாளர்கள் மகாநாட்டில் இத்தகவலை வெளியிட்டதுடன் மேலும் அவர் சுயதொழில் முயற்சி கடன்வழங்க யாழ். மாவட்டத்தில் 105000 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் 60000 பேருக்கு மட்டும் நாலாயிரம் ரூபா நிதி வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் கடந்த காலத்தில் 762 பேருக்குமொத்தமாக 85 லட்ச ரூபா வீடுசேதமுற்றதற்கான நட்டஈடு வளங்கப்பட்டுள்ளது. என்றும்குறிப்பிட்டார். (லோ)

### கட்டுத் துவக்கில் சிக்கி குடும்பஸ்தர் பலி

(மூதூர்)

நேற்றுக்காலை ஒருமணியளவில் காட்டு மிருகத்திற்கு வைக்கப்பட்ட கட்டுத்துவக்கில் மூதூர் அரிப்பைச்சேர்ந்த கோபாலபிள்ளை என்னும் ஆறு பிள்ளைகளின் தந்தை அகப்பட்டு மரணமானார்.

## நகருக்குள் வந்த படையினரை புலிகள் திருப்பி அனுப்பினர்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் கடற்படை முகாமைச்சேர்ந்த கடற்படைச் சிப்பாய்கள் சிலரும் இலங்கை இராணுவத்தினர் சிலரும் நேற்று மாலை யாழ் நகர் பெரிய கடைக்கு ஆயுதங்களுடன்வந்திறங்கியபோது நகரில் பரபரப்பு ஏற்பட்டது.

இச்செய்தி விடுதலைப் புலிகளுக்கு எட்டியதும் அவர்கள் அந்த இடத்துக்கு விரைந்து வந்து கடற்படைச் சிப்பாய்களைச் சூழ்ந்து கொண்டனர் இதனைத் தொடர்ந்து விடுதலைப் புலிகளைச் சேர்ந்த

(6ஆம் பக்கம் பார்க்க)

## இலாபநோக்கிற்காகமற்றவருக்கு குந்தகம் 'விளைவிக்கக் கூடாது

(யாழ்ப்பாணம்)

-ஆஞ்சநேயர்

தமிழீழ விடுதலைப் போராட்டம் உலகில் முக்கிய கவனத்தை ஈர்ந்துவரும் இன்றைய பொழுதில் தமிழீழ மக்களாகிய நாம் எத்தொழில் செய்பவர்களாக இருந்தாலும் சரி. மற்றவனைவிட கூடிய லாபம் பெற்றுவிட வேண்டும் என்றும் அதற்காக இன்னொருவனுடைய தொழிலுக்குக் குந்தகம் விளைவிப்பதும் தவிர்த்துக்கொள்ள வேண்டியதாகும், நாம் எப்பொழுதும் எமது நாட்டினதும் எம் மக்களினதும் பொருளாதார, அபிவிருத்தியில் கவனம் செலுத்துபவர்களாகவே உள்ளோம். எமது மக்கள் பட்டி

(6ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் அகதிகள் புனரமைப்புக்கு புலிகளின் உதவி கேட்கிறது ஐ.நா.

(திருக்கோணமலை)

திருக்கோணமலை மாவட்டத்தில் புனர்வாழ்வுவேலைத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு விடுதலைப் புலிகளின் திருமலை அரசியல் பொறுப்பாளர் திரு. றூபனுடன் ஐ. நா. அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் பிரதிநிதிகள் நேற்று வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் மாளிகையில் நடந்த சந்திப்பின்போது ஒத்துழைப்பைக் கோரினர்.

ஆளுநர் ஜெனரல் நளின் செனிவிரத்தினா ஒழுங்கு செய்த இச்சந்திப்பில் திருமலை இராணுவத் தளபதி லால் விஜேசூரியா, பொலிஸ் அதிபர் ரி. ஈ. ஆனந்தராஜன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## தபால் அதிபர்கள் இடமாற்றம்

(வேலணை)

வேலணை பிரதம அஞ்சலகத்தில் அஞ்சலக அதிபராக கடமையாற்றி வந்த திரு.எஸ் பசுபதி புத்தளம் அஞ்சலகத்திற்கும் ஒட்டிசுட்டான் அஞ்சலகத்தில் தபால் அதிபராகக் கடமையாற்றி வந்த திரு. சம்

(6ஆம் பக்கம் பார்க்க)

**வரிவிளம்பரம்**

**விற்பனைக்கு**

நீரிழிவு வியாதிகளுக்கு உகந்த தனிக் கோதுமை அரிசியில் தயாரிக்கப்பட்ட ஆட்மா மா, கோதுமை, அரிசிக் குறுணல், கோதுமை அரிசி றவை எங்களிடமும், பிரதான கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். M- G. M. No. 777 K. K. S. Road, Jaffna. (B/67

**சேவை**

RAJZ BRAND எவசில்வர் பாத்திரங்கள் எங்கும் கிடைக்கும், உங்கள் விருப்பமே எங்கள் சேவை! பற்பல டிசைன்களில் பற்பல ரகங்கள்! சாப்பாட்டுப் பீங்கான்கள் செற் சட்டிகள், தாச்சிச் சட்டிகள், றேகள், சோஸ்பான்கள். பொரியல் சட்டிகள், டின்னர் செற்கள், ரீ செற்கள் கோவிற் சாமான்கள் இன்னும் பற்பல நம்பிக்கை நிதானம் RAJZ BRAND, பார்வை அறை S. A. தேவதாசன், சூராவத்தை, சுன்னாகம். (B-270)

**விற்பனையாகிறது**

வரலாறு ஆண்டு 6, வரலாறு ஆண்டு 7, 1990 ஆம் ஆண்டு தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படுகின்ற பாடத்திட்டத்தை தழுவி எழுதப்பட்டது. ஆக்கம், ஆலோசனை: எம். எஸ். அப்துல்ரஹீம், தி. கமலநாதன்

**தேவை**

சீமென்ற் வெற்று பைகள் (Cementy Empty Bags) தேவை இருப்பவர்கள் நேரில்தொடர்பு கொள்ளவும் அல்லது கொண்டு வரவும் நியாய விலை கொடுக்கப்படும்.
அண்ணா தொழிலகம் இணுவில். (B-389)

**அச்சுக்கோர்ப்பாளர்தேவை**

கீழ்க்கண்ட அச்சகத்திற்கு அனுபவம் வாய்ந்த அச்சுக் கோர்ப்பாளர்கள் தேவை. மாநகர சபை எல்லைக்குள் வசிப்பவராயின் விரும்பத்தக்கது. 05-04-90 க்கு முன்பாக விண்ணப்பிக்கவும்.
''செந்தில்ஸ்'' 225, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் B/417

**திருமண சேவை நிலையம்**


அன்னை பூபதி

# ஈழப்போராட்டம் உறுதிநிலை அடைவதற்கு காரணமானவர்

(சித்தங்கேணி)

திலீபனது இலட்சியத்தை முன்னெடுத்துச் சென்று, ஈழ விடுதலைப் போராட்டம் இன்றைய உறுதி நிலையை அடைவதற்குக் காரணமாக இருந்தவர் அன்னை பூபதி. அவர் காட்டிய வழியில் பெண்கள் விடுதலைப் போராட்டத்தில் தனது பங்களிப்பினைச் செலுத்த முன்வர வேண்டும்.

இவ்வாறு வட்டுக்கோட்டை கண்ணகி அம்பாள் ஆலய முன்றலில் கடந்த சினிக்கிழமை இரவு நடைபெற்ற விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியின் அரசியல் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய வலிகாமம் மேற்கு அரசியல் பொறுப்பாளர் திரு. ஆஞ்சநேயர் குறிப்பிட்டார்.

திரு. ஆஞ்சநேயர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது;

சிங்கள இனவாத அரசு, தமிழீழ விடுதலைப் புலிகளுடன் நடத்திய போராட்டத்தில் தோல்வி கண்டதனால், இந்திய வல்லாதிக்கத்தின் உதவியை நாடியது. இந்திய இராணுவம் ஈழ மண்ணிலிருந்து வெளியேற வேண்டும் என்பதற்காக, எவரது தூண்டுதலுமின்றித் தனது இரண்டு புதல்வர்களையும் இழந்த நிலையில் சாகும் வரை உண்ணாவிரதம் இருந்து உயிர் நீத்தவர் அன்னை பூபதி. சர்வதேச அரங்கிலேயே உலகின் நான்காவது பெரிய வல்லாதிக்க நாடொன்றிற்கு எதிராக உண்ணாவிரதப் போராட்டம் நடத்தி உயிர் நீத்த பெருமை தமிழ் ஈழப் பெண்ணான அமரர் அன்னை பூபதியையே சாரும். அவர் இந்த நூற்றாண்டின் சகாப்தம்.

இந்திய இராணுவத் தளபதி கல்கத் இலங்கையிலிருந்து வெளியேறும்போது, இந்திய இராணுவம் தனது போராட்ட யுக்திகளை மாற்றிக் கொள்ள வேண்டுமென்று கூறுவதிலிருந்து, விடுதலைப் புலிகளுடனான போராட்டத்தில் தமது தோல்வியை ஒப்புக் கொள்கிறார்.

தமிழீழ விடுதலைப் புலிகளை உலகின் எந்த வல்லாதிக்கச் சக்திகளாலும் அழித்து விட முடியாது. உலகிலேயே முதன்மையான, மிகவும் கட்டுப்பாடான விடுதலை இயக்கமாக சாதனைகள் பல புரிந்த இயக்கமாக விடுதலைப் புலிகள் இயக்கம் பரிணாம வளர்ச்சி பெற்றுள்ளது. இதற்குக் காரணம் தலைவர் பிரபாகரனின் சரியான வழிகாட்டலும், தமிழ் மக்களின பூரண ஒத்துழைப்புமேயாகும்.

ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்காகப் போராடும் நாடுகளுக்கெல்லாம் வழிகாட்டியாக விடுதலைப் புலிகள் விளங்குகிறார்கள், இன்று மக்களில் சிலர் தமது உயிர் போய்விடும் என்று பயந்து பங்களிப்புச் செய்ய முன்வருவதில்லை. தமிழ்பேசும் மக்கள் அனைவரினதும் பூரண ஒத்துழைப்பும் எமக்குக் கிடைக்கும்போது, நாம் மேன் மேலும் பலம் பெற்ற மக்கள் இயக்கமாக மாறி விடுவோம். இதனால் விடுதலைப் புலிகளின் போராட்டம் பற்றி எதிர்காலத்தில் எவரும் அஞ்சத் தேவையில்லை என்று ஆஞ்சநேயர் குறிப்பிட்டார்.

விடுதலைப் புலிகளின் மகளிர் அணியைச் சேர்ந்த செல்வி பார்தி உரையாற்றும்போது:

பெண்கள் விடுதலைப் போராட்டத்தில் தமது பங்களிப்பைச் செலுத்த வேண்டும் என்றும், அடக்குமுறைகளுக்கும், சமூக ரீதியாக பெண்ணடிமை நிலைக்கும் எதிராகக் கிளர்ந்தெழும் பெண்கள் போராட்டத்தில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்வதற்காகப் பாசறைகளை நோக்கி வரும் போது, பெற்றோர்கள் அவர்களைத் தடுக்கக் கூடாதென்றும் கேட்டுக் கொண்டார்.

விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணிப் பிரமுகர்களான திரு. க. செல்வநாயகம், திரு. கே. குலசூரியர் ஆகியோரும் உரை நிகழ்த்தினர். விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் கலை கலாசாரப் பேரவையினரின் நாடகமும், ''நடந்து வந்த பாதை'' என்ற வில்லிசையும் இடம்பெற்றது. (23


ஞாபகப்படுத்துகின்றோம்

இன்று

27 - 03 - 1990

செஞ்சிலுவைக் கொடி தினம்

''உங்களுக்கு உதவ எமக்கு உதவுங்கள்''

இலங்கை


## கீரிமலையில் இரவில் வெளிச்சம் இல்லை

(ஈச்சமோட்டை)

கீரிமலை தீர்த்தக்கரை இருமண்டபத்தில் பொருத்தப்பட்டிருந்த 58 ரியூப்லைட்டுகள் துருப்பிடித்து பாவிக்க முடியாத நிலையிலுள்ளது. இதனால் இரவில் வரும் உல்லாசப் பிரயாணிகள் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர். இதனால் அவர்கள் இரவில் தங்கவும் முடியாது அவதிப்படுகின்றனர் (34)

## ஆசிரிய பயிலுனர்களுக்கு பயிற்சி

(கொழும்பு)

## புத்தாண்டை ஒட்டி யாழ்.உ.அ.அதிபர்பிரிவில் விளையாட்டுப் போட்டிகள்

(யாழ் விளையாட்டுநிருபர்)

தமிழ் சிங்கள புத்தாண்டை முன்னிட்டு யாழ் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மாபெரும் விளையாட்டு விழாவும் கலை, கலாசார விழாவும் இடம் பெறவுள்ளது.

சைக்கிள் ஓட்டப் போட்டி (ஆண் பெண்) மரதன் ஓட்டப் போட்டி அங்கவீனர்களுக்கான மூன்று சில்லுச் சைக்கிள் ஓட்டப்போட்டி, ஏழு பேர் கொண்ட உதைபந்தாட்டப் போட்டி வலைப்பந்தாட்டப் போட்டி வினோத உடைப் போட்டியும்நடைபெறவுள்ளது

போட்டிகளில் கலந்து கொள்ள விரும்புவோர் ஏப்ரல் மாதம் ஐந்தாம் திகதிக்கு முன் விண்ணப்பங்களை உதவி அரசாங்க அதிபர் பணிமனை யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டுமென அறிவிக்கப் பட்டுள்ளது. (42)

## அன்னை பூபதிக்கு அஞ்சலி

(பூநகரி)

தியாக தீபம் அன்னை பூபதிக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக பூநகரி வர்த்தகர்கள் சந்தை வியாபாரிகள். ஆகியோர் தங்கள் நிலையங்களுக்கும், வீதிகளுக்கும் தோரணம் கட்டி அன்னை பூபதியின் உருவப்படம் வைத்து கடந்த 19 ஆம் திகதி முதல் தமது அஞ்சலியை செலுத்தி வருகின்றார்கள்.

## கீரிமலையில் அந்தியேட்டி செய்வோர் தொகை அதிகரிப்பு

(ஈச்சமோட்டை)

இந்திய அமைதிப் படையினர் வெளியேறிய பின்னர் கீரிமலையில் இறந்தவர்களின் அந்தியேட்டிக் கிரியைகளைச் செய்யச் செல்பவர்களின் தொகை நாளாந்தம் அதிகரித்து வருகிறது. அந்தியேட்டி செய்யும் மண்டபம் இதற்கு ஏற்ப போதிய வசதிகளைக் கொண்டதாகஇல்லை. ஆகையால் அதனை விஸ்தரித்து ஆவனசெய்தால் அந்தியேட்டி செய்பவர்களின் குறைகளை நீக்க முடியும். அத்துடன் உல்லாசப் பிரயாணிகளின் தொகையும் அதிகரித்துக் காணப்படுகிறது. சிலர் தூர இடங்களிலிருந்து கீரிமலை தீர்த்தத்தில் நீராடுவதற்காக தீர்த்தக்கேணியில் குவிந்து காணப்படுகின்றனர். தீர்த்தக் கரை பிள்ளையார் கோவிலும் புனருத்தாரணம் செய்யப்பட்டு வருகிறது. ஆனால் கீரிமலை வீதிகள் இன்னமும் புனரமைப்புச் செய்யப்படவில்லை. இதனால் போக்குவரத்துச் செய்வது கஷ்டமாக உள்ளது. (43)

## ஆஸ்பத்திரி பொலிஸார் மூக்கைப் பொத்தி வேலை

(பண்டத்தரிப்பு)

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி பொலிஸார் மூக்கைப் பொத்திக்கொண்டே கருமமாற்றுகின்றனர். அவர்களுக்கு என இங்கே வழங்கப்பட்ட அறைகளுக்கு அருகில் மலசலகூடம் இருப்பதே இதற்கு காரணமாகும்.

இது குறித்து பொதுமக்களும், பொலிஸாரும் பலதடவைகள் மேலிடத்துடன் தொடர்புகொண்டும் எதுவித பலனும் இல்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த பொலிஸ் அலுவலகத்தை வேறு இடத்துக்கு மாற்றுமாறும் கோரிக்கை விடப்பட்டுள்ளது. (12)

## கிராமப்புற மாணவ, மாணவிகள் ஆற்றலை வளர்க்க பயிற்சிவேண்டும்

(பண்டத்தரிப்பு)

பெரிய கல்லூரிகள், நகர்ப்புற

யில் போட்டிகள் நடைபெற்றன.


யாழ் நகரில் இன்றைய சினிமா

வின்சர் - யாழ்
10·30 2.30 6.30
**BOBBY**
(உருது)
இனிய பாடல்களுடன் கூடிய காதல் காவியம்

81 வது நாளாக!!
நியூ சாந்தி (யாழ்)
தினசரி 10.30, 2.30, 6.30
சூப்பர் ஸ்ரார்' ரஜனி - அமலா நடித்த
**கொடி பறக்குது**
(கலர்)

7 வது வாரம்
மனோகரா - (யாழ்)
தினசரி 10.30, 2.30, 6.30
ரஜனி, ரூபினி. நடித்த
**மனிதன்**
(கலர்)

ஜனத்திரள் காட்சிகள்
ஹரன் யாழ்.
10-30 2-30 6-30
கமலஹாசன் சரண்யா நடித்த
**நாயகன்**
(கலர்)

லிடோ (யாழ்)
75வது நாளை நோக்கி அரங்கு நிறைந்த காட்சிகள்
10. 30, 2. 30, 6. 30
★ பிரபு ★ சரிதா
**பூ- பூவா பூத்திருக்கு**
(கலர்)

ராஜா (யாழ்)
10. 30, 2. 30, 6. 30
ரஜனி (இரு வேடம்) ராதா, நதியா
**ராஜாதி ராஜா**
(கலர்)

128வது நாளை நோக்கி அரங்கு நிறைந்த காட்சிகள்
வெலிங்டன் (யாழ்)
தினசரி
10. 30, 2. 30 6. 30
★ கார்த்திக் ★ குஷ்பு
**வருஷம் 16**
(கலர்)


## உதை பந்தாட்டப்

சீமெந்து வெற்று பைகள்
(Cementy Empty Bags) தேவை இருப்பவர்கள் நேரில்தொடர்பு கொள்ளவும் அல்லது கொண்டு வரவும் நியாய விலை கொடுக்கப்படும்.
அண்ணா தொழிலகம் இணுவில். (B-389)

## அச்சுக்கோர்ப்பாளர்தேவை

கீழ்க்கண்ட அச்சகத்திற்கு அனுபவம் வாய்ந்த அச்சுக் கோர்ப்பாளர்கள் தேவை. மாநகர சபை எல்லைக்குள் வசிப்பவராயின் விரும்பத்தக்கது. 05-04-90 க்கு முன்பாக விண்ணப்பிக்கவும்.
''செந்தில்ஸ்'' 225, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் B/417

## திருமண சேவை நிலையம்

பரமேஸ் கோணேஸின் முன்னணிப் பாடகர் 'வின்ரோ மகேந்திரா' ஆரம்பிக்கும் மெல்லிசைக் குழுவுக்கு பெண் பாடகிகள், Lead Guitor Flute, Violin வாத்தியக் கருவிகள் மீட்டுவதில் திறமையுள்ளவர்கள் உடன் தேவை. திருமண சேவை நிலையம், 6 நவீன சந்தை மேல்மாடி, யாழ்ப்பாணம். (B/308)

## பழைய புத்தகம்

பழையபுத்தகங்கள் வாங்கப்படும் விற்கப்படும். SENA THIRAJAHSECOND HAND BOOK HOUSE 13/6 ஸ்ரான்லி றோட், முரசொலி இலங்கை வங்கிக்கு முன் பட்டப்படிப்பு கல்லூரி கண் சிகிச்சை நிலைய லேன்) யாழ்ப்பாணம். (R-46)

## கட்டாக் காலி மாடுகள் தொல்லை

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை சங்கரத்தை பகுதிகளில் கட்டாக் காலி மாடுகளின் தொல்லையால் சிறுதானியம் செய்யும் விவசாயிகள் பாதிக்கப் படுவதாகவும் அவர்கள் மகஜர் ஒன்று தயாரித்து கமநல சேவை தொல்புரம் பகுதிக்கு அனுப்பவுள்ள தாகவும்தெரிவித்தார்கள். (47)

புது வருடமே
வருக! வருக!

அழகிய புகைப்படங்களைநீங்கள்எடுத்திட

ஸபாஸ்
ஸ்ருடியோ
11, ஸ்ரான்லி வீதி
யாழ்ப்பாணம்.
(B/420)

20-6-61

லாதிக்க நாடொன்றிற்கு எதிராக உண்ணாவிரதப் போராட்டம் நடத்தி உரி இயக்கமாக மாறி விடுவோம். இதனால் விடுதலைப் புலிகளின் போராட்டம் பற்றி

ஞாபகப்படுத்துகின்றோம்

இன்று
27 - 03 - 1990
செஞ்சிலுவைக் கொடி தினம்

''உங்களுக்கு உதவ
எமக்கு உதவுங்கள்''

இலங்கை
செஞ்சிலுவைச் சங்கம்
யாழ். பிரிவு,
73, கண்டி வீதி
யாழ்ப்பாணம்.
B/427

ஈழநாதத்திற்கு
எமது இனிய வாழ்த்துக்கள்

அன்றீஸ் அன் கம்பனி
லிமிட்டெற்,
நாவற்குழி.

எமது ஏற்றுமதித்தரத்திலான (EXPORT QUALITY) பின்வரும் கடலுணவுப் பொருட்களை முதன்முதலாக வடமாகாணத்தில் சந்தைப்படுத்துகின்றோம்.

- சுத்தப் படுத்திய இறால்
- ,, கணவாய்
- ,, நண்டு

அத்தோடு

- எமது தொழிற்சாலையிலேயே பதனிடப்பட்ட உரித்த இறைச்சிக்கோழி (DRESSED BROILERS)

1 கிலோ கிராம் ரூபா 75/- மாத்திரமே.

கொழும்பிலிருந்து விசேடமாகத் தருவிக்கப்பட்ட சகவிதமான ஐஸ்கிறீம் (ICE CREAM வகைகள்

என்பதை மகிழ்ச்சியுடன்
அறியத்தருகிறோம்.
(B/ 148)

கீரிமலை தீர்த்தக்கரை இரு மண்டபத்தில் பொருந்தப்பட்டிருந்த 58 ரியூப்லைட்டுகள் துருப்பிடித்து பாவிக்க முடியாத நிலையிலுள்ளது. இதனால் இரவில் வரும் உல்லாசப் பிரயாணிகள் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர். இதனால் அவர்கள் இரவில் தங்கவும் முடியாது அவ:திப்படுகின்றனர் (34)

## ஆசிரிய பயிலுனர்களுக்கு பயிற்சி

(கொழும்பு)

மாவட்ட கல்விப் பயிற்சித் திட்டத்தில் 25,000, ஆசிரிய பயிலுனர்களுக்கு பயிற்சி அளிக்கப்படும். இரண்(ு) கட்டங்களில் அளிக்கப்படும் இப் பயிற்சி நெறிக்கு வெளிநாட்டு நிறுவனங்கள் உதவி வழங்குகின்றன. இரண்டாவது கட்ட பயிற்சி நெறிக்கு 21 கோடி ரூபாவுக்கும் அதிகமான தொகை தேவைப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனை வெளிநாடுகள் வழங்க இருக்கின்றன.

## இறப்பர் செய்கை

(கொழும்பு)

அறுபத்தி இரண்டாயிரத்து ஐந்நூறு புதிய காணிகளில் உலக வங்கியின் உதவியுடன் இறப்பர் செய்கை மேற்கொள்ளப்படும். 57,500 ஏக்கரில் மரம் நடுகை ஆரம்பிக்கப்படும்.

## அம்புலன்ஸ வண்டி தேவை

(பூநகரி)

பூநகரி வைத்தியசாலைக்கு வழங்கப்பட்ட அம்புலன்ஸ் வண்டி கடந்த மூன்று மாதங்களுக்கு முன் விபத்துக்குள்ளாகியது. திருத்த வேலைக்கென யாழ் கொண்டு செல்லப்பட்ட வண்டி மூன்றுமாத காலமாகியும் இன்னமும் வந்து சேரவில்லை. இதன் காரணமாக ஆபத்தான நிலையில் உள்ள நோயாளர்களை யாழ் போதனா வைத்தியசாலைக்கு அ ஓுப்பி வைக்க வாகன வசதியின்மையால் நோயாளர்கள் தங்கள் செலவிலேயேவாகனத்தை அமர்த்தவேண்டியுள்ளது. இதனால் ஏழை மக்கள் மிகவும் கஷ்டமடைகின்றனர்.

## ஆஸ்பத்திரி பொலிஸார் மூக்கைப் போத்தி வேலை

(பண்டத்தரிப்பு)

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி பொலிஸார் மூக்கைப் பொத்திக்கொண்டே கருமமாற்றுகின்றனர். அவர்களுக்கு என இங்கே வழங்கப்பட்ட அறைகளுக்கு அருகில் மலசலகூடம் இருப்பதே இதற்கு காரணமாகும்.

இது குறித்து பொதுமக்களும், பொலிஸாரும் பலதடவைகள் மேலிடத்துடன் தொடர்புகொண்டும் எதுவித பலனும் இல்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த பொலிஸ் அலுவலகத்தை வேறு இடத்துக்கு மாற்றுமாறும் கோரிக்கை விடப்பட்டுள்ளது. (12)

## கிராமப்புற மாணவ, மாணவிகள் ஆற்றலை வளர்க்க பயிற்சிவேண்டும்

(பண்டத்தரிப்பு)

பெரிய கல்லூரிகள், நகர்ப்புற கல்லூரிகளை விட கிராமப்புற பாடசாலை மாணவமாணவியர்ஆற்றல்களையும்ஆரோக்கியங்களையும் சாதனை ஏற்படுத்துவதற்கு ஏற்ற விதமாக மாணவர்களுக்கு பயிற்சியளிக்க வேண்டும்

கிராமத்தின் ஆரோக்கியமான வளர்ச்சி தான்நாட்டின் ஸ்திரத்திற்கு அத்திவாரம் என இளவாலை கொத்தணி அதிபர் சங்கைக்குரிய பிதா ஒகஸ்ரின் ஞானப்பிரகாசம் மாதகல் நுணசைவித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியின்பிரதம விருந்தினராகக் கலந்து உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

வித்தியாலய அதிபர் திரு. வே.சேனாதிராசா தலைமையில் போட்டிகள் நடைபெற்றன.

சொந்த விளையாட்டுமைதானம் இல்லாமலே மெய்வல்லுநர் தமது திறமைகளை அபராமாக வளர்த்துள்ளனர்.

இவர்கள் முயற்சி பாராட்டப்பட வேண்டிய ஒன்று. இப்படியான கிராமிய மட்ட பாடசாலைகட்கு சகலவசதிகளும் வழங்கப்படின் உண்மையில் பல சாதனைகளை அசாத்திய சாதனைகளைஏற்படுத்துவர் என தான் கருதுவதாகத் தெரிவித்தார்

பாண்டியன் இல்லம் முதலாவது இடத்திற்கான சுழற்சி வெற்றிக் கோப்பையும், சோழன் இல்லம் இரண்டாம் இடத்திற்கான பரிசையும் பெற்றது. சேரன் மூன்றாவது இடத்தைப் பெற்றது. (12)

(கலர்)

ராஜா (யாழ்)
10. 30, 2. 30, 6. 30
ரஜனி (இரு வேடம்)
ராதா, நதியா
ராஜாதி ராஜா
(கலர்)

128வது நாளை நோக்கி
அரங்கு நிறைந்தகாட்சிகள்
வெலிங்டன் (யாழ்)
தினசரி
10. 30, 2. 30 6. 30
★ கார்த்திக் ★ குஷ்பு
வருஷம் 16
(கலர்)

## உதை பந்தாட்டப் போட்டி

(கரவெட்டி)

பருத்தித்துறை மாவட்ட உதைபந்தாட்ட லீக்கின் வேலுப்பிள்ளை ஞாபகார்த்த வெற்றிக்கிண்ண உதை பந்தாட்டப் போட்டி எதிர்வரும் ஏப்பிரல் மாதம் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் பங்குபற்றவுள்ள அனைத்து விளையாட்டுக்கழகங்களும் இம்மாதம் 31ம் திகதிக்கு முன்னர் மேற்படி உதை பந்தாட்ட லீக்கின் தலைவர் திரு. எஸ்.கே. இராசேந்திரத்துடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர். (18)

தொழிற் பயிற்சி

- றேடியோ, ரெலிவிஷன், வீடியோ டெக் றிப்பெயறிங் ஆரம்பத்தில் இருந்து திருத்தப்படும் முறை செய்முறைப் பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்படும்.
- DIPLOMA IN DRAUGHTSMEN SHIP
- ENGINEERING DRAWING
  பொறியியல் பீட மாணவர்களுக்கேற்ற முறையில் பயிற்சியளிக்கப்படும்.
- எலக்ரிக்கல் வயறிங்
- வீட்டு மின்சார வேலை, மின் உபகரணம் திருத்துதல் பயிற்சியளிக்கப்படும்.
- றீவைண்டிங்
- மின் மோட்டர், மின்விசிறி, ரான்ஸ்போமர் வைன்டிங் செய்யும் முறை பயிற்சியளிக்கப்படும்.

மீண்டும் ஆரம்பம். 30-03-1990 (கிழமை நாட்கள்) 31-03-1990 (சனி, ஞாயிறு)

விபரங்களுக்கு:
JAFFNA TECHNICAL INSTITUTE
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(றெயில்வே கடவை அருகாமை)
B.426

# லித்வேனியப் பிரச்சினை எமது பிரச்சினை

# அமெரிக்கப் பாதுகாப்பு ஆலோசகர் கருத்து

(வாஷிங்டன்)

லித்வேனியா பிரச்சினை ''எமது பிரச்சினையாகும்'' என்றும், இப்பிரச்சினை இரு நாடுகளுக்கிடையிலுமான நல்லுறவுகளைப் பாதிக்கலாம் என அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் பிறன்ற்ஸ்கவூகிறாவ்ற் சென்ற சனியன்று தெரிவித்தார்.

லித்வேனியாவில் சோவியத்தின் நிர்ப்பந்தம் அதிகரித்தால் அல்லது பதற்ற நிலை நீடிக்குமாயின் வாஷிங்டன் தகுந்த நடவடிக்கை எடுக்குமென அவர் எச்சரித்துள்ளார்.

சோவியத் யூனியன் இராணுவ நடவடிக்கை ஒன்றை மேற்கொள்ளுமாயின், அது தகுந்த மாற்றுவழியல்லவென்றும், அதைத் தாம் சகித்துக் கொண்டிருக்க மாட்டோம் என்றும், தமது உணர்வுகளை சோவியத் யூனியன் நன்கு அறியும் எனவும் அவர் கருத்துத் தெரிவித்தார்.

பயமுறுத்தல், லித்வேனியாவில் தலையிடுதல் போன்ற நடவடிக்கைகள் நல்ல விளைவுகளைத் தராதென்றும், இம் முயற்சி இரு நாடுகளுக்கிடையிலுமான நல்லுறவுகளைப் பாதிக்கலாம் எனவும் அமெரிக்கத் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் பிறன்ற் கூறினார்.

லித்வேனியா ஒரு உள் விவகாரம் என்றும், அதில் மற்றவர்கள் தலையிடுவதைத் தாம் விரும்பவில்லை என்றும் மஸ்கோ அறிவித்துள்ளது.

## உள்ளூராட்சி சபைகளிடையே போட்டிகள் நடாத்த ஏற்பாடு

(மட்டக்களப்பு)

அகில இலங்கை ரீதியில் மாநகரசபை, நகரசபை, பிரதேச சபைகளுக்கிடையிலான போட்டிகள் நடாத்த பொது நிர்வாக மாகாணசபை, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு தீர்மானித்துள்ளது.

2 ஆம் கட்டமாக நடைபெறும் இப் போட்டிகளில் வெற்றிபெறும் சபைகளுக்கு 30 இலட்சம் ரூபா பெறுமதியான பரிசுகள் வழங்கப்படும்.

கொழும்பு மாநகரசபை தவிர ஏனைய மாநகரசபைகள் கலந்து கொள்ளலாம்.

சூழல் அழகு, பொது சுகாதாரம், பொது நூலகம், சன சமூக நிலையம், பாலர் பாடசாலை, ஆயுர்வேத மருந்தகம், சிகிச்சை நிலையங்கள் ஆகியவற்றை அடிப்படையாக கொண்டு போட்டிகள் நடைபெறும். (37)

## ஹங்கேரித் தேர்தலில் சோஷலிஸ்ட் கட்சி தோல்வி

(புடாபெஸ்ற்)

ஹங்கேரியில் நாற்பதாண்டுகளில் முதல் முறையாக நடைபெற்றுள்ள சுயேச்சையான தேர்தல்முடிவுகள் வெளிவரத் தொடங்கி விட்டன.

தெளிவான நிலைவரம் தெரியவிட்டாலும் கூட பிரதம மந்திரி மித்ரோன் தனது சோஷலிசக் கட்சியின் தோல்வியை ஏற்றுக் கொண்டிருக்கிறார் அதேவேளைஹங்கேரி வானொலிச் செய்தி சோசலிச கட்சி வெற்றியடைய வாய்ப்பில்லை என்று அறிவித்திருக்கிறது. ஆனால் அக்கட்சி நிலையான ஒரு எதிர்க்கட்சியாக இருக்கும் எனவும் அறிவித்தது.

386 இடங்களுக்கான இத் தேர்தலில் 27 அரசியல் கட்சிகள் பங்குபற்றின. 1600 வேட்பாளர்கள் இத் தேர்தலில் நின்றனர்.

## ஊக்குவிப்பு அலவன்ஸ் வளாக ஊழியர்களுக்கும்தேவை

(மட்டக்களப்பு)

வட-கிழக்கு மாகாண அரச ஊழியர்களுக்குவழங்கப்பட்ட 6 மாத கால ஊக்குவிப்பு அலவன்ஸ் பல்கலைக்கழகக் கல்வியணிசாரா ஊழியர்களுக்கும் வழங்கப்பட வேண்டும்.

மேற்கண்டவாறு கிழக்குப் பல்கலைக்கழகக் கல்வியணிசாரா ஊழியர்கள் சங்கச் செயலாளர் திரு. எஸ் எஸ். சூரியகாந்தன் ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் கேட்டுள்ளார்.

அவரது கடித விபரம் வருமாறு:

கடந்த காலங்களில் இன்றைய அரசு வட - கிழக்கு மக்களைப்புறக்கணித்து வந்தது. இப் புறக்கணிப்பு என்ற கருத்தை மாற்றுவதற்குத்தங்கள் அரசு பல முயற்சிகளை எடுத்துள்ளது. இருப்பினும் சில குறைபாடுகள் தொடர்ந்துள்ளது.

குறிப்பாக வட - கிழக்கு மாகாண அரசு ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட பயங்கரவாத பிரதேச ஊக்குவிப்பு அலவன்ஸ் எமக்கு வழங்க மறுக்கப்பட்டுள்ளது.

ஏனைய பல்கலைக் கழகங்களும் பயங்கரவாத சம்பவங்களினால் பாதிக்கப்பட்டன. அங்கு கடமையாற்றும் ஊழியர்களுக்கு வழங்காமல் எமக்குத் தர முடியாது என பல்கலைக் கழக மானிய ஆணைக் குழுச் செயலாளர் அறிவித்துள்ளார் என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகின்றோம். (37)

## நெடுங்கேணி கிராமங்களில் அன்னை பூபதி நினைவு

(நெடுங்கேணி)

உலக சரித்திரத்திலேயே உண்ணா நோன்பிருந்து உயிர் நீத்த முதல் பெண் மணியான அன்னை பூபதியின் நினைவுச் சொற்பொழிவுகளும் தொடர்ச்சியாக இடம் பெறுகின்றன. வீதிகள் தோறும் மகர தோரணங்கள், வாழை மரங்கள் கட்டப்பட்டு நினை

## அரபாத் இந்தியா வந்தார்

(புதுடில்லி)

பாலஸ்தீனயத் தலைவர் யாசீர்அரபாத் இந்தியாவிற்கு மூன்று நாள் பயணமாக நேற்று புதுடில்லி வந்துள்ளார். இவருடன் மூன்று அரசாங்க அதிகாரிகளைக் கொண்ட பிரதிநிதிக் குழுவும் வந்துள்ளது. மேற்காசியா உட்பட சர்வதேச பிரச்சினை பற்றி இந்தியத் தலைவர்களுடன் விரிவான பேச்சு வார்த்தையை அக்குழுவினர் நடத்துவர்.

அரபாத்துக்கு ஜமீமியா மில்லியா பல்கலைக்கழகம் கௌரவ டாக்டர் பட்டம் வழங்க இருக்கிறது அதே வேளை 1988 ஆம் ஆண்டின் சர்வதேச பரிவுணர்வுக்கான ஜவகர்லால் நேரு விருதும் வழங்கப்படும்.

இந்தியாவில் மூன்று நாள் விஜயத்தை முடித்துக் கொண்டு அவர் இலங்கை வருகின்றார்.

## மணிபன்பட்டேல் காலமானார்

(அகமதாபாத்)

இந்தியாவின் பழம்பெரும் விடுதலைப்போராட்ட வீரரான செல்வி மணிபன்பட்டேல் காலமாகி விட்டார். சர்தார்வல்லபாய்பட்டேலின் புதல்வியான இவர் ஞாயிற்றுக்கிழமை அகமதாபாத் பொது மருத்துவ மனையில் காலமானார் 87 வயதான இவர் மூச்சுத் திணறல் காரணமாக இறந்தார் என வைத்திய அதிகாரிகள் தெரிவித்

### நெடுங்கேணியில்

# இந்திய இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட மாணவர் மதீஸ்வரன் கிராமசேவகர் தருமதேவன்

## ஆகியோரின் நிலை என்ன?

(நெடுங்கேணி)

நெடுங்கேணியில் முகாமிட்டிருந்த இந்திய இராணுவத்தினரால் 1988ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 31ஆம் திகதி கைது செய்யப்பட்ட நெடுங்கேணி மகாவித்தியாலய உயர் வகுப்பு மாணவன் செல்வன் தம்பிஐயா மதீஸ்வரன், நெடுங்கேணி மாமடுப் பிரிவு கிராம சேவகராகப் பணியாற்றி 1989ஆம் ஆண்டு ஆடி மாதம் 16ஆம் திகதி கைது செய்யப்பட்ட திரு. முத்தையா தருமதேவன் ஆகியோர் இன்று வரை வீடு திரும்பவில்லை. இவர்கள் என்ன நிலைக்கு உள்ளானார்கள் என்பதுகூட அறிய முடியவில்லை.

1988ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 31ஆம்திகதி (மாவீரன் பண்டாரவன்னியன் நினைவு தினத்தன்று) செல்வன் மதி தனது சொந்தக் கிராமமான மாமடு எனும் இடத்தில் இருந்து வழமைபோல பாடசாலைக்கு வந்தார். ஒட்டுசுட்டான் சந்தியிலுள்ள இராணுவ தடை முகாம் நிலையத்தில் இராணுவத்தினரால் தடுத்து நிறுத்தப்பட்டு இராணுவ முகாமிற்கு அழைத்துச் செல்லப்பட்டார். அன்று காலை பத்து மணியளவில் மகா வித்தியாலய ஆசிரியர்கள் இராணுவ பொறுப்பதிகாரியாக இருந்த மேஜர் சிசோடியா என்பவரைச் சந்தித்து மதீஸ்வரனை விடுதலைசெய்யுமாறு கேட்டார்கள். விசாரித்துவிட்டு விடுதலை செய்வதாக பதில் கிடைத்தது. அடுத்த தினம் (முதலாம் திகதி) மாலை மகா வித்தியாலய ஆசிரியர்கள். மதீஸ்

சொன்னார். ஐந்து நாட்களின் பின், தேடுதல் வேட்டைக்குச் சென்ற சமயம் அவர் ஓடிவிட்டார் எனப் பதில் வந்தது.

இராணுவ உயர் அதிகாரிகள், இந்திய தூதுவர், இலங்கை ஜனாதிபதி இவர் கைது செய்யப்பட்ட விபரம் அனைத்தும் விபரமாக எழுதி முறையீடு செய்தும் எதுவித தகவலும் கிடைக்கவில்லை. கொழும்பு உயர்நீதி மன்றத்திலும் மதீஸ்வரன் தொடர்பாக ஆட்கொணர்வு மனு மதீஸ்வரனின் தந்தை திரு. கந்தையா தம்பிஐயாவினால் தாக்கல் செய்யப்பட்டது. நெடுங்கேணி கிராமோதய சபைத் தலைவர் சம்பவத்தின் விபரத்தினை சத்திய ஓலை மூலம் சாட்சியம் பகர்ந்தார். எதுவிதபயனும் இன்று வரையில் கிடைக்கவில்லை.

1989 ஆடி 16 ஆம் திகதி மாமடுப் பிரிவு கிராம சேவகரான திரு. முத்தையா தருமதேவன் தனது நண்பர் சு. தெய்வேந்திரம் என்பவருடன் தனது உறவினர் ஒருவரின் வீட்டிற்குச் சென்றார். இருவரையும் இந்திய இராணுவத்தினர் கைது செய்தனர். இரண்டு நாட்களின் பின் தாங்கள் தெய்வேந்திரம் என்பவரை மட்டுமே கைது செய்தோம். கிராமசேவகரைக் கைது செய்யவில்லை எனக் கூறிவிட்டனர். இரண்டு வாரத்திற்கு மேலாக தெய்வேந்திரம் தடுத்து வைக்கப்பட்டு பலத்த சித்திரவதைகளுக்கு இலக்கான பின் விடுதலை செய்யப்பட்டார்.

இருவரையும் கைது செய்தவுடன் தனது கண்களை இறுக்கக் கட்டிவிட்டுத் தாக்கினார். அதனால் தான் அறிவு மயங்கி விட்டதாகவும், அதனால் திரு. தருமதேவனுக்கு என்ன நடந்தது என்பது பற்றித் தனக்குத் தெரியாது என்றும் திரு. தெய்வேந்திரம் கூறினார்.

தருமதேவனின் பெற்றோர்கள், அரசாங்க அதிபர், நெடுங்கேணி பிரசைகள் குழுவினர் ஆகியோர் நடவடிக்கைகள் எடுத்தும் எதுவித பலனும் கிடைக்கவில்லை.

தாங்கள் கைது செய்யவில்லை என்றே இராணுவத்தினர் பதிலளித்தனர்.

## "தபாற் சேவையில் ஏற்படும் மோசடிகளால் நாம் தலைகுனிந்து நிற்கவேண்டியுள்ளது"

### - சுன்னாகம் தபால் அதிபர்

(யாழ்ப்பாணம்)

தபாற் சேவையிலிடம் பெறும் மோசடிகள், ஊழல்கள் மற்றும் முறைகேடுகள் பற்றி பத்திரிகைகளில் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. மலசலகூடம், பாண் கிணறு முதலிய இடங்களில் உடைக்கப்பட்ட நிலையில் வெளிநாட்டுக் கடிதங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளதாகவும் பத்திரிகை செய்திகள் தெரிவிக்கின்றன. இந்நிலையில் இன்று நாம் மக்கள் முன்

துவத்தை நிலை நாட்டி விட்டால் நாம் யாருக்கும் அஞ்ச வேண்டியதில்லை. தபாற் சேவை நாட்டின் முதுகெலும்பு. ஒருநாட்டின் சமூக, பொருளாதார, கலாச்சார தொடர்புகளை இணைக்கும் ஒரு சங்கிலியாக தபாற்சேவை அமைந்து விடுகிறது. இச்சங்கிலி அறுக்கப்பட்டு விட்டால் நாடே அழிந்து விடும் எனவும் குறிப்பிட்டார்.

## மன்னாருக்கு பெண் நீதிபதி

## மரம் முறிந்து யுவதி மரணம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி நீதிமன்ற வளாகத்தில் நின்ற மாம் முறிந்து விழ்ந்ததில் ஒரு யுவதி பலி யானார்.

சாரா ஊழியர்கள் சங்கச் செயலாளர் திரு. எஸ் எஸ். சூரியகாந்தன் ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் கேட்டுள்ளார்.

அவரது கடித விபரம் வருமாறு:

கடந்த காலங்களில் இன்றைய அரசு வட - கிழக்கு மக்களைப்புறக்கணித்து வந்தது. இப் புறக்கணிப்பு என்ற கருத்தை மாற்றுவதற்குத்தங்கள் மறுக்கப்பட்டுள்ளது.

ஏனைய பல்கலைக் கழகங்களும் பயங்கரவாத சம்பவங்களினால் பாதிக்கப்பட்டன. அங்கு கடமையாற்றும் ஊழியர்களுக்கு வழங்காமல் எமக்குத் தர முடியாது என பல்கலைக் கழக மானிய ஆணைக்குழுச் செயலாளர் அறிவித்துள்ளார் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். (37)

ஜவகர்லால் நேரு விருதும் வழங்கப்படும்.

இந்தியாவில் மூன்று நாள் விஜயத்தை முடித்துக் கொண்டு அவர் இலங்கை வருகின்றார்.

தினத்தன்று) செல்வன் மதி தனது சொந்தக் கிராமமான மாமடு எனும் இடத்தில் இருந்து வழமைபோல பாடசாலைக்கு வந்தார். ஒட்டுசுட்டான் சந்தியிலுள்ள இராணுவ தடை முகாம் நிலையத்தில் இராணுவத்தினரால் தடுத்து நிறுத்தப்பட்டு இராணுவ முகாமிற்கு அழைத்துச் செல்லப்பட்டார். அன்று காலை பத்து மணியளவில் மகா வித்தியாலய ஆசிரியர்கள் இராணுவ பொறுப்பதிகாரியாக இருந்த மேஜர் சிசோடியா என்பவரைச் சந்தித்து மதீஸ்வரனை விடுதலைசெய்யுமாறு கேட்டார்கள். விசாரித்துவிட்டு விடுதலை செய்வதாக பதில் கிடைத்தது. அடுத்ததினம் (முதலாம் திகதி) மாலை மகா வித்தியாலய ஆசிரியர்கள், மதீஸ்வரனின் பெற்றோர், பாடசாலை அபிவிருத்தி சபை உறுப்பினர்கள், நெடுங்கேணி கிராமோதய சபைத் தலைவர் ஆகியோர் இராணுவ அதிகாரியைச் சந்தித்து மதீஸ்வரனை விடுதலை செய்யுமாறு வேண்டினார்கள். ஒரு வாரத்தினுள் அவரை விடலாம் என இராணுவ அதிகாரி கூறினார்.

மீண்டும் அடுத்ததினம் நெடுங்கேணி கிராமோதய சபைத் தலைவரும், பிரஜைகள் குழு செயலாளருமான திரு. பீற்றர் பொன்கலன் இராணுவ பொறுப்பதிகாரியைச் சந்தித்து மதீஸ்வரன் பரீட்சை எடுக்கவேண்டியுள்ளதால், பரீட்சைக்காலம் நெருங்குவதால் அவரை விடுதலை செய்ய வேண்டுமென வற்புறுத்தினர். மதீஸ்வரன் இராணுவச் சிப்பாய்களின் தக்குதலுக்கு இலக்காகி வருத்தமாக இருக்கிறார். அவரை இராணுவ வைத்திய சாலையில் சேர்க்கப் போகின்றோம் என அதிகாரி பதிலளித்தார். அதற்கு திரு. பொன்கலன் அப்படி வருத்தமாயின் நெடுங்கேணி வைத்தியசாலையில் சேர்க்கலாம் தானே என்று கேட்டபோது, இன்னும் ஒருமணி நேரத்துல் வைத்தியசாலைக்குக் கொண்டு வருகின்றோம் என பதிலளித்தார். ஆனால் கொண்டு வரப்படவில்லை. அடுத்ததினம் மதீஸ்வரனின் பெற்றோர், உறவினர்கள், திரு. பொன்கலம் ஆகியோர் இராணுவ அதிகாரியைச் சந்தித்துக் கேட்டபோது, எல்லோரும் வைத்தியசாலையில் நில்லுங்கள். இப்போ கொண்டு வருவோம என்றனர். ஆனால் பத்து நிமிட நேரத்தின் பின், மதீஸ்வரனைக் கொண்டுவர முடியாது; அவரை நாங்கள் தேடுதல் வேட்டைக்குக் கொண்டு போகப் போகிறோம் என இராணுவ உயர் அதிகாரி

தார். எதுவிதபயனும் இன்று கான பின் விடுதலை செய்யப் தினர் பதிலளித்தனர்.

# நெடுங்கேணி கிராமங்களில் அன்னை பூபதி நினைவு

(நெடுங்கேணி)

உலக சரித்திரத்திலேயே உண்ணா நோன்பிருந்து உயிர் நீத்த முதல் பெண் மணியான அன்னை பூபதியின் நினைவாக நெடுங்கேணியில் பல கிராமங்களில் எழுச்சி மிகு நினைவு நிகழ்ச்சிகள் இடம் பெற்று வருகின்றன.

மாமடு- பழம்பசி, நெடுங்கேணி பட்டிக் குடியிருப்பு, ஒலுமடு, மருதோடை, நயினாமடு, ஆனந்தற் புளியங்குளம் போன்ற இடங்களில் அலங்காரப் பந்தல்களும், நினைவுச் சொற்பொழிவுகளும் தொடர்ச்சியாக இடம் பெறுகின்றன. வீதிகள் தோறும் மகர தோரணங்கள், வாழை மரங்கள் கட்டப்பட்டு நினைவுப் படங்கள் வைக்கப்பட்டுள்ளன.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் மாணவர் அமைப்பினால் நெடுங்கேணி மாகவித்தியாலயத்தில் அமைக்கப்பட்ட அலங்காரப் பந்தலில் நினைவுச் சொற்பொழிவுகள் இடம் பெறுகின்றன.

# உலகின் சிறிய குடியரசின் பெயர் மாற்றம்

(சான்மறினோ)

கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் நிகழ்ந்து வரும் அரசியல் மாற்றங்கள் உலகின் மிகச் சிறிய குடியரசான சான் மறினோவையும் பாதித்துள்ளது.

சான் மறினோக் குடியரசில் ஆட்சியிலிருக்கும் கம்யூனிஸ்ட் கட்சி உலகிலேயே சிறிய கம்யூனிஸ்ட் கட்சியாகக் கருதப் படுகிறது. கட்சியில் அங்கத்துவம் வகிக்கும் 1,100 உறுப்பினர்கள், அடுத்த மாதம் நடைபெற விருக்கும் கட்சி மகாநாட்டில், கட்சியின் பெயரை முற்போக்கு ஜனநாயகக் கட்சி என்று மாற்றியமைக்க உள்ளார்கள். கட்சிக் கொடியில் பொறிக்கப் பட்டுள்ள சின்னங்களான அரிவாளும், சுத்தியலும், நட்சத்திரமும் அகற்றப்பட்டுப் பதிலாக ஒரு வெள்ளைப் புறாவும், சான் மறினோவில் உள்ள இரண்டு மலைக்குன்றுகளின் படங்களும்பொறிக்கப்படவுள்ளன. கட்சியின் தலைவர்களில் ஒருவரான அல்பேட்டா மினோ சென்ற சனியன்று இத் தகவலை வெளியிட்டார்.

இத்தாலிய நாட்டில் ஒரு பகுதியில் அமைந்திருக்கும் இக் குடியரசின் ஜனத்தொகை 23,000 ஜனத்தொகையில் 23% கம்யூனிஸ்ட் கட்சி பிரதிநிதித்துவப் படுகிறது.

இதேவேளை மேற்குஐரோப்பிய நாடுகளிலுள்ள கம்யூனிஸ்ட் கட்சிகளில் பெரிய கட்சியான இத்தாலியக் கம்யூனிஸ்ட் கட்சியும், இரண்டு வாரங்களுக்கு தனது பெயரை மாற்றியமைக்கப் போவதாக அறிவித்திருந்தது.

# புத்தாண்டு முற்பணம்

(மட்டக்களப்பு)

இவ் வருடம் முதல் புத்தாண்டு முற்பணம் ரூபா 1500 என பொது நிர்வாக மாகாணசபை உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு சுற்றறிக்கை கூறுகிறது.

ஆனால் மட்டக்களப்பு மாவட்ட பாடசாலை ஆசிரியர்களுக்கு ரூபா 1000 வழங்கப்பட்டுள்ளது.

இது பற்றி கல்வி இலாகாவுடன் தொடர்பு கொண்ட போது அதிகரிப்பு தொடர்பான சுற்றறிக்கை தமக்கு கிடைக்கவில்லை என்று தெரிவித்தனர். (37)

# மணிபன்பட்டேல் காலமானார்

(அகமதாபாத்)

இந்தியாவின் பழம்பெரும் விடுதலைப்போராட்ட வீரரான செல்வி மணிபன்பட்டேல் காலமாகி விட்டார். சர்தார்வல்லபாய்பட்டேலின் புதல்வியான இவர் ஞாயிற்றுக்கிழமை அகமதாபாத் பொது மருக்துவமனையில் காலமானார் 87 வயதான இவர் மூச்சுத் திணறல் காரணமாக இறந்தார் என வைத்திய அதிகாரிகள் தெரிவித்தனர்.

மகாத்மா காந்தியின் அழைப்பினை ஏற்று தனது இளம் வயதிலேயேஇந்திய விடுதலைப் போராட்டத்தில் கலந்து கொண்டார். இப் போராட்ட காலத்தில் பல முறை சிறை சென்றிருக்கிறார். இவர் மூன்று முறை பாராளுமன்ற உறுப்பினராகவும் ஒரு முறை ராஜ்யசபாவில் உறுப்பினராகவும் தெரிவு செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

# பஞ்சாப்பில் சர்வகட்சி கூட்டம்

(புதுடில்லி)

பஞ்சாப்பில் தேர்தல் பற்றி விவாதிக்க புதுடில்லியில் அனைத்துக்கட்சி கூட்டம் ஒன்று நடைபெற்றது. இக் கூட்டம் நேற்று பாராளுமன்ற வளாகத்தில் நடைபெற்றது.

இதற்கு முன்னதாக இந்தியப் பிரதமர் வி. பி. சிங் சண்டிகாருக்கு விஜயம் செய்த போது விரைவில் சட்டசபைத் தேர்தல் நடைபெறும் என்றும் தான் அரசியல் கட்சிகளுடன் கலந்தாலோசித்து விட்டு அறிவிப்பார் என்றும் குறிப்பிட்டார். அதன் பிரகாரம் இவ் அனைத்துக் கட்சிக் கூட்டம் நடைபெற்றதாக அதிகாரிகள் குறிப்பிட்டார்கள்.

# நியூயோர்க் தீவிபத்தில் 87 பேர் பலி!

(நியூயோர்க்)

நியூயோர்க் நகரில் கடந்த ஞாயிறன்று அதிகாலை நடந்த தீவிபத்தில் 87 பேர் வரை இறந்துள்ளனர். பிராங்யோ என்ற பகுதியில் அமைந்துள்ள ஒரு மாடிக்கட்டிடத்தில் இத் தீவிபத்து நடந்தது. இதில் 100 பேர் வரை சிக்கியதாகவும், பலர் புகையில் மூச்சுத்திணறி உயிர் இழந்ததாகவும் அறியப்படுகிறது.

# "தபாற் சேவையில் ஏற்படும் மோசடிகளால் நாம் தலைகுனிந்து நிற்கவேண்டியுள்ளது"

## - சுன்னாகம் தபால் அதிபர்

(யாழ்ப்பாணம்)

தபாற் சேவையிலிடம் பெறும் மோசடிகள், ஊழல்கள் மற்றும் முறைகேடுகள் பற்றி பத்திரிகைகளில் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. மலசலகூடம், பாண் கிணறு முதலிய இடங்களில் உடைக்கப்பட்ட நிலையில் வெளிநாட்டுக் கடிதங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளதாகவும் பத்திரிகை செய்திகள் தெரிவிக்கின்றன. இந்நிலையில் இன்று நாம் மக்கள் முன் தலைகுனிந்து நிற்க வேண்டியிருக்கிறது. இவ்வாறு சுன்னகாம் பிரதம தபாலதிபர் நேற்று முன்தினம் சாலை சுன்னாகம் தபால் உத்தியோகத்தர், ஊழியர் மத்தியில் பேசும் போது குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது. மேற்படி சம்பவங்கள் வேறு இடங்களில் தானே நடக்கின்றன; நாம் ஏன் இவை பற்றி அலட்டிக் கொள்ள வேண்டும் என எங்களில் சிலர் கேட்கலாம். ஆனால் நாம் ஒன்றை மட்டும் புரிந்து கொள்ள வேண்டும். வெவ்வேறு இடங்களில் இடம் பெற்றாலும் கூட அவைபற்றி பொதுமக்களுக்கு விபரங்கள் தெரியமாட்டா. தபாற்சேவையிலிடம் பெறுவதனால் எல்லாத் தபாற்காரரர்களையும், உத்தியோகத்தர்களையும் சந்தேகிப்பார்கள். எனவே எங்கள் மட்டத்திலாவது நேர்மையை கடைப் பிடித்து சேவையின் புனிதத்துவத்தை நிலை நாட்டி விட்டால் நாம் யாருக்கும் அஞ்ச வேண்டியதில்லை. தபாற் சேவை நாட்டின் முதுகெலும்பு. ஒருநாட்டின் சமூக, பொருளாதார, கலாச்சார தொடர்புகளை இணைக்கும் ஒரு சங்கிலியாக தபாற்சேவை அமைந்து விடுகிறது. இச்சங்கிலி அறுக்கப்பட்டு விட்டால் நாடே அழிந்து விடும் எனவும் குறிப்பிட்டார்.

# மன்னாருக்கு பெண் நீதிபதி

மன்னார் புதிய மாவட்டநீதிபதியாக திருமதி ஏ அருச்சுனா நியமிக்கப்பட்டுள்ளார். பதிவாளராகக் கடமையாற்றிய திரு. கே. பெரியதம்பி கொழும்பு அப்பீல் நீதிமன்றத்துக்கு மாற்றம் பெற்றுள்ளார். அதேவேளை நீதிமன்றங்களில் எதுவித வழக்குகளும் விசாரிககப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (43)

# விபத்து மரணம்

(வட்டுக்கோட்டை)

நேற்று முன்தினம் காலை 9 00 மணியளவில் வட்டுக்கோட்டைகிழக்கில் கணேசரத்தினம் அகாலமரணமானார். இவர் தோட்ட வேலைகளில் ஈடுபட்ட சமயம் தவறுதலாகக் கிணற்றில் விழுந்ததினால், இம்மரணம் ஏற்பட்டது. அயலில் உள்ளவர்கள் இவரைக் காப்பாற்ற முயன்றும முடியவில்லை, (47)

# மட்டக்களப்பில் வீடமைப்புப் பணிகள் ஆரம்பம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் புனர்வாழ்வு புனர் அமைப்பு ஒன்றிணைப்பு திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்படும் வீடமைப்பு பணிகள் தற்பொழுது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மேற்படி தகவலை தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை மட்டக்களப்பு மாவட்ட முகாமையாளர் திரு. கே. பத்மநாதன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது ரூபா 700/- 1500/- வரையிலான வருமானம் உடையோர் அரச மானியமாக 15,000 ரூபாவையும் மேலதிகமாக 15,000 ரூபா கடனுதவியாகவும் பெறலாம்.

இதுவரை இக்கடனுதவி பெற 450 பேர் விண்ணப்பித்துள்ளார்கள். கொடுப்பனவுகளும் வழங்கப்பட்டு வருகிறது. 1500 -2500 ரூபாவுக்கு உட்பட்ட வருமானம் உடையோர் 50,000 கடன் பெற முடியும். இதுவரை 75 போர் விண்ணப்பித்துள்ளனர். 2500 ரூபாவுக்கு மேற்பட்ட வருமானத்தைப் பெறுவோர் 1,50,000 ரூபாவைக் கடனாகப் பெறலாம்.

6% வட்டி அடிப்படையில் 15 வருட கால எல்லையில் கடனைத் திருப்பிச் செலுத்த முடியும் என்றார். (37)

# மரம் முறிந்து யுவதி மரணம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி நீதிமன்ற வளாகத்தில் நின்ற மாம் முறிந்து விழ்ந்ததில் ஒரு யுவதி பலி யானார்.

செல்வி தயாளினி பாராஜா வயது 25 என்ற யுவதி வீதியில் சென்று கொண்டிருக்கும் போது நீதிமன்ற வளாகத்தில் நின்ற மரம் முறிந்து வீழ்ந்ததில் மயக்கமுற்றார் பின் யாழ் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் இவதி மர்ணமானார். (லோ)

# தங்கம் கடத்தல் முறியடிப்பு

(கட்டுநாயக்கா)

பாகிஸ்தான் பிரஜை ஒருவர் தங்கத்தைத் தனது மலவாசலினுள் மறைத்து வைத்துக் கடத்த எடுத்த முயற்சி சுங்க அதிகாரிகளினால் முறியடிக்கப்பட்டது.

இவர் சிங்கப்பூரில் இருந்து வந்தார். இவரது நடத்தையில் சந்தேகம் கொண்ட அதிகாரிகள் எக்ஸ்றே மூலம் இதனைக் கண்டுபிடித்தனர்.

பின்னர் வைத்திய சிகிச்சைக்குட்படுத்தப்பட்ட இவரிடமிருந்து இந்த தங்க பிஸ்கட்டுகள் எடுக்கப்பட்டன.

# பூபதியின்நினைவாக வவுனியாவில் சிரமதானம்

(வவுனியா)

உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு, மரணித்த அன்னை பூபதியின் நினைவாக நாளை 28 ஆம் திகதி புதன் கிழமை வவுனியா நகர சபையின் ஆதரவுடன் நகர மத்தியில் சிரமதானம் நடைபெறும்.

வவுனியா நகரப் பாடசாலைகளின் மாணவ, மாணவிகள் இந்தச் சிரமதானவேலைகளில ஈடுபடுவார்கள். (தி)

# பேச்சுப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவிகள்

இலங்கை தமிழ்ச் சங்கம் அகிலஇலங்கை ரீதியில் நடாத்திய மேற்பிரிவு பேச்சுப்போட்டியில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர் தரக் கல்லூரி உயர் வகுப்பு மாணவி செல்வி சிவாந்தினி நடராஜா முதலாவது இடத்தைத் தட்டிக்கொண்டார்.



செல்வி சிவாந்தினி கீரிமலை சிவநெறிக் கழகம் நடாத்திய பேச்சுப்போட்டியிலும், மேலைப்புலோலி சதாவதானி கதிரவேற்பிள்ளை சனசமூக நிலையம் நடாத்திய பேச்சுப் போட்டியிலும்பருத்தித்துறை ப. நோ. கூ. சங்கம்நடாத்திய கூட்டுறவுதின விழா பேச்சுப் போட்டியிலும் முதலாவது இடங்களைத் தட்டிச் சாதனை நிலைநாட்டியவர். இவர் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரக் கல்லூரியில் நடாத்தப்பட்ட ''சம்பரும் கலைவாணியும்'' வில்லிசைக் கச்சேரியில் முக்கிய பங்கெடுத்து பலரது பாராட்டுதல்களையும் பெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவர் இளைப்பாறிய இலங்கை மின்சாரசபை உத்தியோகத்தர் திரு. ஏ. நடராஜா திருமதி நடராஜா ஆகியோரின் புத்திரியாவார்.

இலங்கை தமிழ்ச் சங்கம் அகில இலங்கை ரீதியில் நடாத்திய மேற்பிரிவு பேச்சுப் போட்டியில், பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் கல்லூரி உயர்வகுப்பு மாணவி செல்வி வாமதி சங்கரப்பிள்ளை இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

செல்வி வாமதி கீரிமலை சிவநெறிக் கழகம் நடாத்திய பேச்சுப் போட்டிகளில் பல தடவைகள் பரிசுகளைத் தட்டிக் கொண்டுள்ளார். வட இலங்கை சங்கீத சபை நடாத்திய நடன (பரதம்) தராதரப் பரீட்சையில் 84 - ஆம் ஆண்டு முதலாம் தர சித்தியைப் பெற்றார். இவர் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரக் கல்லூரியின் பெண் சாரணியாகவும் சிறப்பாக இயங்கி வருகின்றார்.



இவர் பொறியியலாளர் திரு. கே. சங்கரப்பிள்ளை ஆசிரியை திருமதி சங்கரப்பிள்ளை ஆகியோரின் புத்திரியாவார். (25)

## தென்பகுதிக்கு கல்விச் சுற்றுலா

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்ட பாடசாலை மாணவர்கள் சுமார் ஏழு வருட கால இடைவெளியின் பின்பு கல்வி சுற்றுலாக்களை மேற்கொண்டுவருகிறார்கள்.

ஏறாவூர் அலிகார் ம. வி மாணவர்கள் அண்மையில் அகிலஇலங்கை சுற்றுலா மேற்கொண்டனர்.

புனித சிசிலியாமகளிர் வித்தியாலய மாணவிகள் கண்டிக்கு சுற்றுலா மேற்கொண்டனர்.

ஏனைய பாடசாலைகள் அடுத்த தவணை முதல் சுற்றுலா மேற்கொள்ள திட்டமிட்டுள்ளது. (37)

## ஆணையாளருக்கு நன்றி

(கொழும்புத்துறை)

பாஷையூர்ப் பகுதியில் சீரான நீர் விநியோகம் சம்பந்தமாக உடன் நடவடிக்கை மேற்கொண்டமைக்காகப் பாஷையூர் மக்கள் முன்னேற்றச் சங்க சனசமுக நிலையம், யாழ். மாநகர ஆணையாளருக்குப் பாராட்டும் நன்றியும் தெரிவித்துத் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

பாஷையூர்ப் பகுதியில் பல ஆண்டுகளாக வீடுகளுக்கும் வீதிகளிலுள்ள தண்ணீர்க் கம்பங்களுக்கும் போதியளவு நீர் பெற முடியாமல் பொது மக்கள் அவதியுற்று வந்தனர். தண்ணீர்த் தட்டுப்பாட்டினர் பொது மக்கள் தேவாலயங்களுக்கும், தனியார் வீடுகளில் உள்ள கிணறுகளுக்கும் படை எடுத்து வந்தமை குறிப்பிடத்தக்கது. (24)

## தென்மராட்சியில் அன்னைபூபதிக்கு அஞ்சலி

(சாவகச்சேரி)

அன்னை பூபதி கணபதிப்பிள்ளையின் தியாகத்தை கௌரவிக்கும் முகமாக தென்மராட்சி எங்கும் அன்னை பூபதிக்காக அஞ்சலி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

அன்னை பூபதியின் உருவப் படங்கள் விசேடமாக அலங்கரிக்கப்பட்ட பந்தல்களில் வைத்து மலர் மாலை அணிவித்து மங்கள விளக்கேற்றி மக்கள் கூடி அஞ்சலி செய்து வருகிறார்கள்.

# விளையாட்டுத் துறைக்கென 25,000ரூபா ஒதுக்கியுள்ளேன்

(கிளிநொச்சி)

விளையாட்டுப் போட்டிகளைத் திறம்பட நடாத்துவதற்கும், விளையாட்டுக் கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்களை வாங்கிக் கொடுத்தற்காகவும் பன்முகப் படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்திலிருந்து இருபத்தி ஐயாயிரம் ரூபாவை ஒதுக்கியுள்ளேன்.

நாம் வழங்கும் விளையாட்டு உபகரணங்களை நல்ல முறையில் பாவித்து இம் மாவட்டத்தில் மட்டுமல்லஇலங்கையிலேயே சிறந்த வீரர்களாக வர இங்குள்ள வீர, வீராங்கனைகள் முயற்சிக்க வேண்டும்.

கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள விளையாட்டுக் கழகங்களுக்கிடையே விளையாட்டு அமைச்சினால் நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டியின் இறுதிநாள் நிகழ்ச்சியில்பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பேசிய கிளிநொச்சி அரசாங்க அதிபர்திரு. கே. மாணிக்கவாசகர் இவ்வாறு கூறினார்.

மேற்படி போட்டி கிளிநொச்சி இந்து மகாவித்தியாலய மைதானத்தில் கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ்வேலுப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

அரசாங்க அதிபர் திரு. மாணிக்கவாசகர் தொடர்ந்து பேசுகையில் யாழ். மாவட்டத்துடன்இருந்த கிளிநொச்சி தனி மாவட்டமாகப் பிரிக்கப்பட்டதால்கிளிநொச்சிமாவட்டம் சகலதுறைகளிலும் முன்பு இருந்ததை விடத் துரிதமாக முன்னேறி வருகிறது.

அடுத்த ஆண்டு இங்குள்ளவர்களுக்கு விளையாட்டுப் பயிற்சி பெற விளையாட்டு மைதானம் இல்லை என்ற குறைபாட்டைப் போக்க ஆவன செய்வேன். அதுமட்டுமல்ல சகலவழிகளிலும் இம் மாவட்டத்தை முன்னேற்ற ஆவன செய்வேன் என்றார்.

மேலதிக அரசாங்க அதிபர் திரு எஸ். அமிர்தலிங்கம் உட்படப் பலர் பேசினர்.

## வவுனியாவில் இந்துசமய வகுப்புகள்

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் உள்ள 5 ஆம் ஆண்டு முதல் 10 ஆம் ஆண்டு வரை உள்ள மாணவர்களுக்கு சீ.ரீ.சீ. எம் பாடசாலையிலும், 11 ஆம் ஆண்டு, 12ஆம் ஆண்டு, மாணவர்களுக்கு சைவப்பிரகாச வித்தியாசாலையிலும் இந்து சமய வகுப்புகள் நடாத்தப்பட்டு வருகின்றன.

வவுனியா சுத்தானந்தஇந்து இளைஞர் சங்கம் இந்த வகுப்புக்களை நடாத்திவருகிறது.

தரம் வாய்ந்த ஆசிரியர்களும் இந்துசமய குருமாரும் சொற்பொழி வாற்றிவருகின்றார்கள்.

இதில் பங்கு பற்றும் மாணவர்களுக்கு வருட முடிவில் பரீட்சை நடாத்தி, சான்றிதழ்கள் வழங்கப்படும் என்று சுத்தானந்த இந்து இளைஞர் சங்கப் பொருளாளர் திரு. நா. பற்குணன் தெரிவித்துள்ளார். (தி)

ஸ்கந்தவரோதயா - மானிப்பாய் இந்து

# கிரிக்கெட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவு

(யாழ். விளையாட்டு நிருபர்)

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்கும், மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கும் இடையில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் இந்துக் கல்லூரி 8 விக்கெடடுக்களை இழந்து 206 ஓட்டங்களைப் பெற்றது. செல்வன் கே. ஜெயகாந்தன் 55ஓட்டங்களையும், செல்வன் எஸ். பாஸ்கரன் ஆட்டமிழக்காமல் 47 ஓட்டங்களையும் தமது அணிக்குச் சேர்த்துக் கொடுத்தனர். அடுத்து ஆடிய ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 48 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுள்ளது. செல்வன் கே. ஜெயகாந்தன் 6 ஓட்டங்களை மாத்திரம் கொடுத்து 5 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். தொடர்ந்து ஆடப் பணிக்கப்பட்ட ஸ்கந்தவரோதயாக் கல்லூரி ஆட்ட நேர இறுதி வரை மிகவும் நிதானமாக விளையாடி 5 விக்கெட்டுக்களை இழந்து 110ஓட்டங்களைப் பெற்றுள்ளது (42)

# கல்மடு கிராம மக்களுக்கு நேரில் சென்று மாத்தயா நன்றி

(வவுனியா)

வவுனியா கல்மடு கிராமத்துக்குச் சென்ற விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் திரு. மகேந்திர ராசா (மாத்தயா) அங்குள்ள மக்களைச் சந்தித்து உரையாடினார்.

கடந்த வெள்ளிக்கிழமை அவருடன் மேற்படி மக்கள் முன்னணிச் செயலாளர் திரு. யோகி உட்பட பல உறுப்பினர்கள் சென்றிருந்தனர்.

இந்தியப் படையினதும், [illegible] அட்டூழியங்களுக்கு மத்தியில் புலிகளுக்கு ஆதரவு வழங்கி விடுதலைப் போராட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்கிய மக்களுக்கு நன்றி தெரிவித்துப் பேசினார்.

இறந்த போராளிகளின் பெற்றோர்களுக்கு ஆறுதல் தெரிவித்தார். மக்களின் நெருங்கிய ஆதரவினால்தான் எமது போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது என்று அங்கு அவர் குறிப்பிட்டார். (தி)


யாழ்ப்பாணம்

பல. நோ. கூ. சங்கம் - வரைவுள்ளது

## பொருள் வழங்குனர்களைப் பதிவு செய்தல்

யாழ்ப்பாணம் பல. நோ. கூ. சங்கத்திற்குத் தேவையான பொருட்களை மொத்த விலையில் வழங்கும் வியாபாரிகள் தம்மை எமது சங்கத்தில் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர். மேலும் விபரங்கட்கு எம்முடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

--பொதுமுகாமையாளர்

யாழ். ப. நோ. கூ. சங்கம் - வ.து.
259, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

(B/424)



நல்லூர் ப. நோ. கூ. சங்கம்

## பதவி வெற்றிடம்

பொது முகாமையாளர்

மேற்படி பதவிக்கு தகுதி வாய்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

சம்பளத் திட்ட இல. 101 : 5
ரூபா 1505 -- 75X6 - 100X6 -- 2555
இத்துடன் சங்கத்தால் வழங்கப்படும் இதர படிகளும்.
வயது 23 - 50 வரை

தகைமைகள்: (அ) கூட்டுறவுச் சங்க ஊழியர் 6ஆம் சம்பளத் திட்ட பதவி ஒன்றில் 3 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுச் சங்க ஊழியர் 7ஆம் சம்பள திட்ட முகாமை மட்ட அல்லது மேற்பார்வை மட்ட பதவி ஒன்றில் 6 வருடங்களுக்குக் குறையாத அனுபவம். அல்லது

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டதாரிச் சான்றிதழ் அல்லது இதற்குச் சமமான தகைமைகளுடன் அங்கீகரிக்கப்பட்ட / கைத்தொழில் நிறுவனமொன்றில் முகாமை மட்ட பதவி ஒன்றில் 6 வருடங்களுக்குக்கு குறையாத அனுபவம். அல்லது

(இ) கூ. ச. ஊ. (உயர்தரம்) சான்றிதழ்/ க. பொ. த. (உயர்தரம்) மூன்று பாடங்களில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக, கைத்தொழில் நிறுவனமொன்றில் முகாமை மட்ட பதவி ஒன்றில் 8 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.



பருத்தித்துறை ப. நோ. கூ. சங்கம் (வ/து)

பெண் சாரணியாகவும் சிறப்பாக இயங்கி வருகின்றார். இவர் பொறியியலாளர்

ஆசிரியை திருமதி சங்கரப்பிள்ளை ஆகியோரின் புத்திரியாவார். (25)

# கல்மடு கிராம மக்களுக்கு நேரில் சென்று மாத்தயா நன்றி

(வவுனியா)

வவுனியா கல்மடு கிராமத்துக்குச் சென்ற விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் திரு. மகேந்திரராசா (மாத்தயா) அங்குள்ள மக்களைச் சந்தித்து உரையாடினார்.

கடந்த வெள்ளிக்கிழமை அவருடன் மேற்படி மக்கள் முன்னணிச் செயலாளர் திரு. யோகி உட்பட பல உறுப்பினர்கள் சென்றிருந்தனர்.

இந்தியப் படையினதும், துரோகக் கும்பல்களினதும் அட்டூழியங்களுக்கு மத்தியில் புலிகளுக்கு ஆதரவு வழங்கி' விடுதலைப் போராட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்கிய மக்களுக்கு நன்றி தெரிவித்துப் பேசினார்.

இறந்த போராளிகளின் பெற்றோர்களுக்கு ஆறுதல் தெரிவித்தார். மக்களின் நெருங்கிய ஆதரவினால்தான் எமது போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது என்று அங்கு அவர் குறிப்பிட்டார். (தி)

# பயிற்சி தாதிகளுக்கு 3 மாதம் சம்பளமில்லை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு தாதிகள் பயிற்சிக் கல்லூரி பயிற்சி தாதிகளுக்கு தைமாதம் முதல் சம்பளம் வழங்கப்பட வில்லை என புகார்கள் தெரிவிக்கப் படுகிறது,

இக் கல்லூரியில் 200 பேர் தாதிகள் பயிற்சி பெறுகிறார்கள். 3 மாத சம்பளம் இன்றி இவர்கள் பெரிதும் பாதிக்கப் பட்டுள்ளார்கள்.

முன்பு பி.சு.சே. பணிப்பாளர் அலுவலகம் மூலம் வழங்கப்பட்டு வந்தது.

போதனா வைத்தியதுறை அமைச்சு ஜனவரி முதல் மத்திய அரசின் கீழ் கொண்டு வரப்பட்டது.

இதனால் இவர்களுக்கான கொடுப்பனவுகள் அமைச்சினால்தான் அனுப்பிவைக்கப் பட வேண்டும் என மட்/பி. சு.சே. பணிப்பாளர் அலுவலக அதிகாரியொருவர் தெரிவித்தார். (37)

## அன்னைபூபதிக்கு அஞ்சலி

(சாவகச்சேரி)

அன்னை பூபதி கணபதிப் பிள்ளையின் தியாகத்தை கௌரவிக்கும் முகமாக தென்மராட்சி எங்கும் அன்னை பூபதிக்காக அஞ்சலி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

அன்னை பூபதியின் உருவப் படங்கள் விசேடமாக அலங்கரிக்கப் பட்ட பந்தல்களில் வைத்து மலர் மாலை அணிவித்து மங்கள விளக்கேற்றி மக்கள் கூடி அஞ்சலி செய்து வருகிறார்கள்.

# ...போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவு

(யாழ். விளையாட்டு நிருபர்)

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்கும், மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கும் இடையில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் இந்துக் கல்லூரி 8 விக்கெட்டுக்களை இழந்து 206 ஓட்டங்களைப் பெற்றது. செல்வன் கே. ஜெயகாந்தன் 55ஓட்டங்களையும், செல்வன் எஸ். பாஸ்கரன் ஆட்டமிழக்காமல் 47 ஓட்டங்களையும் தமது அணிக்குச் சேர்த்துக் கொடுத்தனர். அடுத்து ஆடிய ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 48 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுள்ளது. செல்வன் கே. ஜெயகாந்தன் 6 ஓட்டங்களை மாத்திரம் கொடுத்து 5 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். தொடர்ந்து ஆடப் பணிக்கப்பட்ட ஸ்கந்தவரோதயாக் கல்லூரி ஆட்ட நேர இறுதி வரை மிகவும் நிதானமாக விளையாடி 5 விக்கெட்டுக்களை இழந்து 110ஓட்டங்களைப் பெற்றுள்ளது (42)


## பருத்தித்துறை ப. நோ. கூ. சங்கம் (வ/து)

# லொறி உதிரிப்பாகங்கள் ஏல விற்பனை

எமது சங்கத்தின் 24/5123 பென்ஸ்; 24/8431 மொறிஸ், 27/2092 இலக்க இசுசு லொறிகளின் ரயர்கள், பற்றி, மவுளர், வில்லுத்தகடுகள் போன்ற பலரக பழைய உதிரிப்பாகங்களும் 31. 03 1990 சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு எமது சங்கத்தின் பிரதான களஞ்சியத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

ஏலக் கூற்றில் வெற்றி பெறுவோர் ஏலத்தில் பெற்ற பொருட் பெறுமதியை உடனே சங்கக் காரியாலயத்தில் கட்டி ரசீது பெற்று தமக்குரிய பொருட்களை உடன் ஏற்றிச் செல்லுதல் வேண்டும்.

--பொதுமுகாமையாளர்

பருத்தித்துறை
1990. 3. 16

(B/416)



ருபா 1505 -- 75X6 - 100X6 -- 2555

இத்துடன் சங்கத்தால் வழங்கப்படும் இதர படிகளும்.

வயது 23 - 50 வரை

**தகைமைகள்:** (அ) கூட்டுறவுச் சங்க ஊழியர் 6ஆம் சம்பளத் திட்ட பதவி ஒன்றில் 3 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுச் சங்க ஊழியர் 7ஆம் சம்பள திட்ட முகாமை மட்ட அல்லது மேற்பார்வை மட்ட பதவி ஒன்றில் 6 வருடங்களுக்குக் குறையாத அனுபவம். அல்லது

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டதாரிச் சான்றிதழ் அல்லது இதற்குச் சமமான தகைமைகளுடன் அங்கீகரிக்கப்பட்ட / கைத்தொழில் நிறுவனமொன்றில் முகாமை மட்ட பதவி ஒன்றில் 6 வருடங்களுக்குக்கு குறையாத அனுபவம். அல்லது

(இ) க. ச. ஊ. (உயர்தரம்) சான்றிதழ்/ க. பொ. த. (உயர்தரம்) மூன்று பாடங்களில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக, கைத்தொழில் நிறுவனமொன்றில் முகாமை மட்ட பதவி ஒன்றில் 8 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

★ விண்ணப்ப முடிவு திகதி 21. 4. 1990

★ சங்க எல்லைப் பரப்பில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

★ சங்கத்தால் கோரப்படும் பிணையைச் செலுத்தல் வேண்டும்.

★ விண்ணப்பங்கள் தலைவர். நல்லூர் ப. நோ. கூ. சங்கம், திருநெல்வேலி என முகவரியிடப்பட்டு, கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பதவியின் பெயர் குறிப்பிடப்பட்டு, 21. 4. 90 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும்.

தலைவர்.
நல்லூர் ப. நோ. கூ. சங்கம்
திருநெல்வேலி

B/403


# 31 ஆம் நாள் கண்ணீர் அஞ்சலி

## அமரர் கந்தசாமி ஜெகநாதன்

(ஜெகன்)

மண்ணுலகில்:
1958 - 12 - 19

விண்ணுலகில்:
1990 - 02 - 26

'ஜெகன் ஜெகன் என்றிச் செகம் புகழ் தலைவா!
செகத்தினை விடுத்து நீர் பரன்பதம் அடுத்தீர்
வற்றாப் பளையாளை வல்லிபுரத்தானை
பற்றாய்ப் பணிந்தனை; பரன்பதம் பற்றினை;
தானமும் தவமும் தர்மமுஞ் செய்தனை;
போனகத் தானமும் பொருந்தவே செய்தனை;
முதலாளியாகவே விளங்கிய போதிலும்
இதமுடன் நற்றொழி லாளருக் குதவினை;
இடும்பை அறியா இயல்பின னாகவே
குடும்பத் தலைவனாய் விளங்கிய கோனே!
அள்ளி அள்ளி ஆதுவரக் கீந்தே
வள்ளலாய் விளங்கிய நம்மில்லத் தலைவா!
அன்பு மனைவியும் அருமை மக்களும் யாம்
துன்புற் றிங்கே தோர்ந்திருந் தரற்ற
சடுதியி லிந்தத் தரணியை விடுத்தே
கடுகினீர் சிவனார் கழலிணை யடிகளை
அடைக நின் ஆத்மா அரிய நற் சாந்தி
அடைக! அடைக! அடைக நற் சாந்தி!!

பேரிழப்பில் துயருறும்

நெல்லியடி,
கரவெட்டி

மனைவி, பிள்ளைகள்,
பெற்றோர்.

(B/153)


"ஈழநாதம்" பத்திரிகைக்கு எமது இனிய வாழ்த்துக்கள் உரித்தாகுக!

## எமது வாடிக்கையாளர்களுக்கு அன்பு கனிந்த புதுவருட வாழ்த்துக்கள் உரித்தாகுக!

அம்மா; கௌரி, கெதியாய் வெளிக்கிடு புதுவருட உடுப்புக்களை வேண்டி வருவோம்.

மகள்: ஆம் அம்மா; யாழ்ப்பாணத்தில், பெரிய கடையில் 41ஆம் இலக்கத்தில் அமைந்திருக்கும் சிவகணேசன் ஸ்ரோர்ஸில் மலிவு விலையில் சேலைகள், காஞ்சிபுரங்கள், சேட் வகைகள் எல்லாம் விற்கின்றார்களாம், அங்கு போவோம்.

அம்மா: சரி மகள், அங்குபோய் வேண்டுவோம்! உன் விருப்பத்தை நான் பூர்த்திசெய்கின்றேன், கெதியாய்ப் புறப்படு!

ஆம்! நம்பிக்கையின் சின்னம்! நிதான விலை! அன்பான உபசரிப்பு!

# சிவகணேசன் ஸ்ரோர்ஸ்

41, பெரியகடை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23169

(B/423)



பிறக்கப் போகும் புது வருடத்தில் எமது தமிழ் மக்கள் நீண்ட சுகத்துடன் இருப்பதற்கு இறைவன் அருள் புரிவாராக!

மோட்டார் சயிக்கிள் உதிரிப்பாகங்கள் விற்பனையாளர்கள்

நியூ பாலகிருஷ்ணாஸ்

374, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

(B/419)

## சிந்தனைக்கு

தூங்காமை கல்வி துணிவுடமை
இம் மூன்றும் நீங்கா நிலனாள்பவர்க்கு

-திருக்குறள்

ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 27 - 03 - 90

## அடகு நகைகள்!

''பொறுமை என்னும் நகையணிந்து
பெருமைகொள்ள வேண்டும் - பெண்கள்''

டீ.கே. பி. சுந்தராம்பாளின் வெங்கலக் குரலில் இந்தப்பாட்டு எத்தனையாயிரம் தடவைதான் ஒலித்தாலும் தங்கநகை வேண்டாமென்று எத்தனை பெண்கள் சொல்வார்கள்?

நகை பெண்கள் மட்டும்தானா? ஆண்களும்கூட நகையணிகிறார்கள். அந்தஸ்துக்கேற்ப நகையணிவது ஒரு மரபாக மாறிக்கொண்டிருக்கிறது.

நகையணியும் பழக்கம் எப்படி ஏற்பட்டது; ஏன் வந்தது?

வங்கிகள், சேமிப்புத்திட்டங்கள் இல்லாத காலத்தில் தங்க நகைகளே சேமிப்பாகவும் கைத்தொழில் விவசாய வர்த்தகத்துக்கு முதலீடாகவும் கருதப்பட்டன.

வர்த்தகத்திலும் கைத்தொழிலிலும் விவசாயத்திலும் இலாபம் வரும்போது அந்த இலாபம் தங்க நகைகளாக உருவம் பெற்றன.

காலப்போக்கில் தங்கநகை அணிவது நாகரிகமாகவும் பின்னர் இவை அந்தஸ்தை அளவிடும் கருவியாகவும் மாறின.

சேமிப்பு வங்கிகளும் வங்கி முறைகளும் வந்த பின்னரும்கூட நகையணியும் பழக்கம் ஒய்ந்து விடவில்லை.

ஆனால் இந்த நகைகள் ஆபத்து நேரத்தில் வங்கிகளில் அடகுவைத்துப் பணம் பெறவும் உதவி வருகிறது.

வடக்குக் கிழக்கு மாகாணங்களில் கொள்ளைக் கோஷ்டிகள் அதிகரித்தசமயத்தில் தங்கள் தங்கநகைகளை வங்கிகளில் பாதுகாப்புக்காக வைத்தவர்களும் உள்ளனர்.

வீட்டில் நிகழும் நன்மை தீமைகளுக்குப் பணத் தட்டுப்பாடு ஏற்பட்ட சமயங்களில் தங்கள் நகைகளை குறைந்த வட்டிக்கு வங்கிகளில் அடகு வைத்தவர்களும்

---

### இந்திய - புலிகள் போர் ஒரு கண்ணோட்டம் 2

# வரலாற்றில் சந்திக்காத படுதோல்வியை

# இந்திய இராணுவம் இங்கு சந்தித்தது

## ஆட்பலம் ஆயுத பலத்தை விட ஆன்மபலமே போரை நிச்சயிக்கும்

**“இந்திய இராணுவம் தனது வரலாற்றில் சந்தித்திராத படுதோல்விகளையும் உயிரிழப்புக்களையும் சந்தித்தது. ஆட்பலத்திற்கும் ஆயுதபலத்திற்கும் மேலாக ஆன்மபலமே யுத்தத்தின் போக்கை நிச்சயிக்கும் சக்தி என்பதை இந்தப் பலப் பரீட்சையில் விடுதலைப்புலி வீரர்கள் இந்திய வல்லரசுக்கு உணர்த்தினார்கள்.’**

இராணுவ ரீதியாக எமது இயக்கத்தை ஒழித்துக் கட்டும் நோக்குடனே இந்திய இராணுவம் எமது மண்ணை ஆக்கிரமித்தது. இந்திய இராணுவத்துடன் மோதலைத் தவிர்த்து இந்திய அரசுடன் ஒத்துழைத்துப்போக எமது தலைமைப்பீடம் அன்று தன்னாலான முயற்சிகளை எடுத்தது என்பது எமது மக்களுக்குத் தெரியாததல்ல. எமது தலைவரின் சுதுமலைப் பிரகடனம் எமது இயக்கத்தின் அன்றைய அணுகு முறையை தெட்டத் தெளிவாக விளக்கியது. ''நாம் இந்தியாவுடன் பகைமையை விரும்பவில்லை இந்திய இராணுவத்துடன் போதலை விரும்பவில்லை'' என்று நாம் பகிரங்கமாக பிரகடனம் செய்த போதும் இந்திய வல்லாதிக்க பூதம் எம்மை விழுங்கி விடக் காத்திருக்கிறது என்பதையும் நாம் நன்கு உணர்ந்திருந்தோம்.

இந்தியாவுடனான போர் தவிர்க்க முடியாத ஒரு வரலாற்று நிர்ப்பந்தமாக எம் மீது திணிக்கப்பட்டது. எமது விருப்பு வெறுப்புகளுக்கு அப்பால், எமது அபிலாசைகளுக்கு அப்பால், நிழ்ந்தாக வேண்டிய ஒரு வரலாற்று நிகழ்வாக இந்திய புலிகள் யுத்தம் வெடித்தது. தமிழீழத்தில் அன்று உருவெடுத்த

வுறுதியை என்றுமில்லாதபடி வலுப்படுத்தியது. எத்தனையோ கஷ்டங்கள், எத்தனையோ இடையூறுகள், எத்தனையோ சோதனைகள், எத்தனையோ ஆபத்துகள் எல்லாவற்றையும் எதிர்நீச்சலாடி, புலிகள் இயக்கம் புது மெருகு பெற்றது.

மரபுவழி போர்முறைகளில் பயிற்சி பெற்ற இந்தியப்படைகள் விடுதலைப் புலி வீரர்களின் கெரில்லா போர் முறைக்கு ஈடுகொடுக்க முடியாது திண்டாடினர். மனவுறுதி தளர்ந்து விரக்தியும் ஆத்திரமும் அடைந்த இந்திய இராணுவம் அப்பாவிப் பொதுமக்கள் மீது பழிவாங்கத் தொடங்கியது. போர்த் தர்மங்களையும் மனுநீதியையும் தூக்கியெறிந்து, பொது மக்களை எதிரியாகக் கருதி வெறியாட்டம் ஆடியது. இந்திய இராணுவம், சிங்கள இராணுவத்தை மிஞ்சிய அளவில் தமிழினப் படுகொலைகளைப் புரிந்தது. ஐப்பசி 10 ஆந் திகதியிலிருந்து ஒரு மாதமாக நடைபெற்ற யாழ்ப்பாணப் போரில் மட்டும் இரண்டாயிரம் அப்பாவிப் பொதுமக்கள் இந்திய இராணுவத்தால் கொலையுண்டனர். ஐம்பதினாயிரம் வீடுகள் தரைமட்டமாகின. நூற்றுக்கணக்கில் பெண்கள்

இராணுவம் தமிழீழ மக்களின் ஆதரவை இழந்தது இதனால் இந்திய - புலிகள் போரில் வெகுசன ஆதரவு புலிகள் சார்பில் திரும்பியது. விடுதலைப்புலிகளின் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போரின் நியாயத்தையும் தேவையையும் மக்கள் புரிந்துகொண்டனர்.

இந்தியாவின் இராணுவ வரலாற்றில், இந்தியா சந்தித்த போர் நெருக்கடிகளில் இந்திய - புலிகள் போரே ஒரு நீண்டகாலப் போராக நீடித்தது. ஒரு லட்சத்திற்கு மேலான துருப்புகள் வரை குவிக்கப்பட்டன இரண்டு ஆண்டுகள்வரை நீடித்தஇந்தப் போரில் இந்திய இராணுவம் தனது போர் இலட்சியங்கள் எதையுமே பூர்த்தி செய்ய முடியவில்லை.

புலிகள் இயக்கத்தை முற்றாக அழித்து விடுவது.

பாரிய இராணுவ அழுத்தம் மூலம் புலிகளை சரணடையச் செய்வது

புலிகளிடமிருந்து ஆயுதங்களை களைவது.

புலிகளின் நடமாட்டத்தையும் செயற்பாடுகளையும் நிறுத்திவிடுவது.

புலிகளை மக்களிடமிருந்து அந்நியப்படுத்துவது.

இப்படியான அரசியல் இராணுவக் குறிக்கோள் எதையுமே அடையமுடியாமல் இந்திய

2000க்கும் மேற்பட்ட இந்திய இராணுவ சிப்பாய்களும், நூறுக்கு மேற்பட்ட இராணுவ உயர் அதிகாரிகளும் கொல்லப்பட்டனர். 3500 வரையிலான இந்திய துருப்புகள் காயமடைந்தனர். இவர்களில் பெரும்பாலானோர் கண்ணிவெடிகளில் சிக்குப்பட்டு அங்கவீனர் ஆயினர். புலிகள் தரப்பில் 654 விடுதலை வீரர்கள் வீரமரணம் எய்தினர்.

(தொடரும்)

**இக் கட்டுரை தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற் பிரிவு வெளியீட்டு வாரித்தால் வெளியிடப்பட்டது.**

---

## மகளிர் கல்லூரியில் இப்படியும் கேடுபிடி

எங்கள் பிரதேசத்தில்உள்ள பிரபல்யமான பாடசாலைகளில் மகளிர் கல்லூரியும் ஒன்று. இன்று இந்த பாடசாலையில் சில நிர்வாகச்சீர்கேடுகள் உள்ளன. அங்குள்ள அதிபர், ஆசிரியர்கள், ஊழியர்கள் சகலரும் பொறுப்பற்றவர்கள். அதிபரானவர் பாடசாலையின் ஒழுங்கு நடவடிக்கைகளை சீர்படுத்த தவறுகிறார். ஆசிரியர்களும் கல்வி கற்பிப்பதிலும் சரி ஏனைய விடயங்களிலும் சரி மிகவும் பொறுப்பற்றவர்களாக இருக்கின்றனர். ஊழியர்களும் அவ்வாறே. மொத்தத்தில் பாடசாலையில் இவர்களை எல்லாம் கலைத்துவிட்டு புதிய நிர்வாக அமைப்பையே ஏற்படுத்த வேண்டும். ஏனெனில் இந்நிலை தொடர்ந்தால் பாடசாலையின் எதிர்காலம் மிகவும் பின்தள்ளப்படும்.

19-3-1990 திங்கட்கிழமை நான் எனது சகோதரியின் பாடசாலை விடுகைப் பத்திரம் எடுப்பதற்காக காலை சென்றிருந்தேன். அங்கு ஊழியர் ஒருவரிடம் இது சம்பந்மாக வினாவியபோது அவர் இதுபற்றி அறிவித்தல் பலகை (Notice Board)யில் போட்டிருப்பதாக கூறினார். அதன்படி அதில் விடுகைப்பத்திரமும் ஏனைய அத்தாட்சிப்பத்திரங்

வித்தலைக் காணவில்லை. முன்பே இந்தப் பாடசாலை பற்றி கேள்வியுற்ற நான் இனி நடக்கப்போவதைப் புரிந்து கொண்டேன். எனினும் அங்குள்ள ஊழியர் ஒருவரை அணுகி விசாரித்தபோது நாம் இப்போதைக்கு தரமாட்டோம். பாடசாலை விடுமுறைக்குள் அதாவது 30-3-90க்கு பின் வந்து எடுங்கள் என என்னை ஏறிட்டுப் பார்க்காமல் சொன்னார்.

எமக்கு உடன் விடுகைப்பத்திரம் தேவை என கூறியும் தர மறுத்து விட்டார். பாருங்கள் நிர்வாகத்தை.

விடுகைப்பத்திரங்களும் அத்தாட்சிப் பத்திரங்களும் ஒருவருக்கு திடீரெனகூட தேவைப்படலாம். இதனை இவ்வாறு தள்ளிப் போடுவதனால் அங்கு படித்த மாணவர்களின்நிலை என்ன? நேர்முகப் பரீட்சைக்குப் போய் எமது பாடசாலையின் நிர்வாகத்தைப் பற்றி கூறினால் அவர்கள் ஏற்றுக்கொள்வார்களா? இதனால் எமக்கு எவ்வளவு பாதிப்பு யோசித்துப் பாருங்கள். இப்பத்திரங்களை உடன் எடுக்க உதவுவீர்களா?

இப்பாடசாலையில் எந்த தேவை வந்தாலும் அங்குள்ள எழுதுவினைஞர்களை அணுகி ஒரு காரியத்தை முடிப்பதற்

---

### கிழக்குப் பகுதியில் சிங்கள வியாபாரிகள்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களுக்கு தென்னிலங்கை வியாபாரிகள் வருகை தர ஆரம்பித்துள்ளனர்.

இம்மாவட்ட அமைதியான சூழ்நிலை தான் இதற்கு காரணமாகும் பிரபலவர்த்தக நிறுவன பிரதிநிதிகளும் தமது வாகனம் சகிதம் பொருட்களை சந்தைப்படுத்துவதில் ஈடுபட்டுள்ளார்கள். (37)

### சைக்கிள் வாங்க ஊழியர்களுக்கு 2000 ரூபா கடன்

(கொழும்பு)

அரசாங்க ஊழியர்களுக்கு சைக்கிள் கடனாக இரண்டாயிரம் ரூபாவை வழங்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

தற்போது 1250 ரூபாவே இவர்களுக்கு சைக்கிள் கடனாக வழங்கப்பட்டுவருகிறது.

பஸ் போக்குவரத்து பயணத்தால் சில ஊழியர்கள் படும் கஷ்டங்களையடுத்து இந்தக் கடனை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

உருவம் பெற்றன.

காலப்போக்கில் தங்கநகை அணிவது நாகரிகமாகவும் பின்னர் இவை அந்தஸ்தை அளவிடும் கருவியாகவும் மாறின.

சேமிப்பு வங்கிகளும் வங்கி முறைகளும் வந்த பின்னரும்கூட நகையணியும் பழக்கம் ஒழிந்து விடவில்லை.

ஆனால் இந்த நகைகள் ஆபத்து நேரத்தில் வங்கிகளில் அடகுவைத்துப் பணம் பெறவும் உதவி வருகிறது.

வடக்குக் கிழக்கு மாகாணங்களில் கொள்ளைக் கோஷ்டிகள் அதிகரித்தசமயத்தில் தங்கள் தங்கநகைகளை வங்கிகளில் பாதுகாப்புக்காக வைத்தவர்களும் உள்ளனர்.

வீட்டில் நிகழும் நன்மை தீமைகளுக்குப் பணத் தட்டுப்பாடு ஏற்பட்ட சமயங்களில் தங்கள் நகைகளை குறைந்த வட்டிக்கு வங்கிகளில் அடகு வைத்தவர்களும் பலர் உளர்.

வர்த்தகம், கைத்தொழில், விவசாயம் ஆகியவைகளில் முதலீடு செய்வதற்காக நகைகளை வங்கிகளில் அடகு வைத்தவர்களும் இருக்கிறார்கள்.

கடந்த சில வருடங்களாக வடக்குக் கிழக்கு மாகாணங்களில் இலங்கை அரச படைகளும் பின்னர் இந்திய இராணுவமும் மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக வர்த்தகம், கைத்தொழில்களை இழந்தவர்களும் நஷ்டமடைந்தவர்களும் அடகு வைத்த தங்கள் நகைகளை மீட்க முடியாத நிலையில் பலருள்ளனர்.

நகைகளை அடகு மீட்பதற்கு அதற்குரிய வட்டித் தொகை அதிகரித்திருப்பது முக்கிய காரணம்.

வட்டியும் முதலும் செலுத்தி நகைகளை மீட்பது மட்டுமன்றி கைத்தொழில் விவசாயத்துக்கு வங்கி வழங்கும் கடன் வசதிகளைப் பெறுவதற்கும் இந்த அடகு வைத்த நகைகள் தடையாக இருக்கின்றன.

வங்கிகளில் அடகு வைத்த நகைகளை மீட்டெடுத்தாலே வங்கிகள் கடன் வழங்க முடியும்.

பல-விதத்திலும் பாதிக்கப்பட்டுள்ள இந்த மக்கள் பெருந்தொகையான வட்டியைச் செலுத்தி நகைகளை எப்படி மீட்க முடியும்?

இயற்கை அழிவு ஏற்படும் சமயங்களில் கைத்தொழிலாளருக்கு, விவசாயிகளுக்கு வழங்கப் பட்ட கடன்களிலிருந்து விலக்களிப்பது எந்த நாட்டிலுமே மனிதாபிமானத்துடன் மேற்கொள்ளப்படும் நடவடிக்கையாகும்.

நகைகளை அடகு வைத்து மீட்க முடியாதிருக்கும் மக்கள் விஷயத்திலும் கருணை காட்டி அவர்களுக்கு வட்டியிலிருந்து விலக்களிக்கப்பட வேண்டும் என்று மனிதாபிமானத்துடன் விடுதலைப்புலிகளின் மக்கள் முன்னணி அரசைக் கேட்டிருக்கிறது.

வங்கிகளும் அரசும் மனிதாபிமானத்துடன் இவ் விஷயத்தில் நடந்து கொள்ளுமென எதிர் பார்ப்போம்.

---

இந்திய இராணுவத்துடன் போதலை விரும்பவில்லை'' என்று நாம் பகிரங்கமாக பிரகடனம் செய்த போதும் இந்திய வல்லாதிக்க பூதம் எம்மை விழுங்கி விடக் காத்திருக்கிறது என்பதையும் நாம் நன்கு உணர்ந்திருந்தோம்.

இந்தியாவுடனான போர் தவிர்க்க முடியாத ஒரு வரலாற்று நிர்ப்பந்தமாக எம் மீது திணிக்கப்பட்டது. எமது விருப்பு வெறுப்புகளுக்கு அப்பால், எமது அபிலாசைகளுக்கு அப்பால், நிர்ழ்ந்தாக வேண்டிய ஒரு வரலாற்று நிகழ்வாக இந்திய புலிகள் யுத்தம் வெடித்தது. தமிழீழத்தில் அன்று உருவெடுத்த முரண்பாட்டுக் களத்தில் எதிரும் புதிருமான இரு சக்திகள் விடுதலை வேண்டி நின்ற ஒரு முற்போக்கு சக்தியும் அடிமை கொள்ள வந்த ஒரு பிற்போக்கு சக்தியும் மோதிக் கொள்வதை எவரும் தடுத்திருக்க முடியாது.

இரண்டு ஆண்டுகளாக நீடித்த இந்தப் போரில் இந்திய இராணுவம் தனது வரலாற்றில் சந்தித்திராத படுதோல்விகளையும் உயிரிழப்புக்களையும் சந்தித்தது. ஆட்பலத்திற்கும் ஆயுதபலத்திற்கும் மேலாக ஆன்ம பலமே யுத்தத்தின் போக்கை நிச்சயிக்கும் சக்தி என்பதை இந்தப் பலப்பரீட்சையில் விடுதலைப்புலி வீரர்கள் இந்திய வல்லரசுக்கு உணர்த்தினார்கள். தமிழீழத்தில் இந்திய வல்லாண்மை தலைகுனிந்தது இளம் புலிகளின் இரும்பை ஒத்த உறுதியும் சாவுக்கு அஞ்சாத வீரமும், அற்புதமான தியாகங்களும் இந்திய இராணுவ கௌரவத்திற்கு இழுக்கைத் தேடிக் கொடுத்தது. புலிகளின் போர்முறைத் திட்டமும் போர் யுக்திகளும் இந்திய இராணுவ அரக்கனின் மனோவுறுதியை உடைத்தது. தமிழீழம் இந்திய சிப்பாய்களின் சுடுகாடாக மாறியது.

பூதாகரமான இந்திய இராணுவ இயந்திரத்தை ஒரு புறமும் சிங்களஆயுதப்படைகளை மறுபுறமும் இந்திய ஏவுநாய்களாக செயற்பட்ட காக்கை வன்னியர் பட்டாளங்களை இன்னொரு புறமாகவும், பல முனைகளில் எதிரிகளையும் துரோகிகளையும் தனித்து நின்று எதிர்த்துப் போராடி தன்னிகரற்ற சாதனைகளை புலிகள் இயக்கம் படைத்தது. இந்த போர் அனுபவம் புலிகளின் போராட்ட திறனுக்கு சிகரமாக அமைந்தது கரந்தடிப் போர்முறை யுக்திகளை செழுமைப்படுத்தியது. மன

[illegible]கத் தொடங்கியது. போர்த் தர்மங்களையும் மனுநீதியையும் தூக்கியெறிந்து, பொது மக்களை எதிரியாகக் கருதி வெறியாட்டம் ஆடியது. இந்திய இராணுவம், சிங்கள இராணுவத்தை மிஞ்சிய அளவில் தமிழினப் படுகொலைகளைப் புரிந்தது. ஐப்பசி 10 ஆந் திகதியிலிருந்து ஒரு மாதமாக நடைபெற்ற யாழ்ப்பாணப் போரில் மட்டும் இரண்டாயிரம் அப்பாவிப் பொதுமக்கள் இந்திய இராணுவத்தால் கொலையுண்டனர். ஐம்பதினாயிரம் வீடுகள் தரைமட்டமாகின. நூற்றுக்கணக்கில் பெண்கள் மானபங்கம் செய்யப்பட்டனர். ஆயிரக்கணக்கில் மக்கள் அங்கவீனர் ஆயினர். யாழ். மருத்துவமனையில் நடந்த கோரக்கொலைகள் இந்திய ஜனநாயகத்திற்கு காலத்தால் சாகாத இழுக்கைத் தேடிக் கொடுத்தது.

தமிழனின் உயிரை தூசாக மதித்து இந்திய இராணுவம் பேயாட்டம் ஆடியது. வரலாற்றில் என்றுமில்லாதபடி எமது மக்கள் தாங்கொணாத் துன்பத்திற்கு ஆளாகினர். இராணுவ அடக்குமுறை ஒரு புறமிருக்க, உணவுத் தடை, மீன்பிடித்தடை, விவசாயத் தடை என்று எமது மக்கள் மீது ஒரு பொருளாதார யுத்தத்தையும் இந்திய அரசு ஏவிவிட்டது. மக்களை பெரும் தொகையில் கொன்று குவித்து, அவர்களை மிருகத்தனமாக அடக்கியொடுக்கி, பஞ்சத்தின் விளிம்புக்குத் தள்ளி, அவர்களை அடிபணிய வைக்க இந்திய அரசு முனைந்தது. நீதியையும் விடிவையும் வேண்டி நின்ற ஒரே குற்றத்திற்காக இந்தியா எமது மக்களை நெருப்பில் வாட்டி எடுத்தது. மரணத்தின் விளிம்பில் வாழ வைத்தது. அமைதி காக்க வந்த இந்திய கரங்களால் ஆறாயிரம் அப்பாவித் தமிழர்கள் அநியாயமாக அழித்தொழிக்கப்பட்டனர். புலிகள்மீது தொடக்கப்பட்ட போர் தமிழீழ மக்கள்மீது ஏவப்பட்ட போராக விஸ்வரூபம் பெற்றது. பாரத தர்மம் மீது, காலம்காலமாய் எமது மக்களுக்கு இருந்துவந்த நம்பிக்கை உடைந்தது. இந்திய ஏகாதிபத்தியத்தின் நிர்வாண கோலத்தைக் கண்டு எமது மக்கள் திகைப்படைந்தனர். பொதுமக்களைத் துன்புறுத்தி, அவர்களின் அடிப்படை சுதந்திரங்களையும், ஜனநாயக உரிமைகளையும் நசுக்கி அவர்களை அடிமை போல நடத்தியதால் இந்திய

போரில் இந்திய இராணுவம் தனது போர் இலட்சியங்கள் எதையுமே பூர்த்தி செய்ய முடியவில்லை.

புலிகள் இயக்கத்தை முற்றாக அழித்து விடுவது.

பாரிய இராணுவ அழுத்தம் மூலம் புலிகளை சரணடையச் செய்வது

புலிகளிடமிருந்து ஆயுதங்களை களைவது.

புலிகளின் நடமாட்டத்தையும் செயற்பாடுகளையும் நிறுத்திவிடுவது.

புலிகளை மக்களிடமிருந்து அந்நியப்படுத்துவது.

இப்படியான அரசியல் இராணுவக் குறிக்கோள் எதையுமே அடையமுடியாமல் இந்திய இராணுவம் திணறியது. பதிலாக, என்றுமில்லாதபடி பெரும் தொகையில் உயிர்ச் சேதத்தை சந்தித்த இந்திய இராணுவம், புலிகள் இயக்கத்திடம் பெருமளவில் ஆயுதங்களைப் பறிகொடுத்தது. இந்திய - புலிகள் போரில் எமது கணக்கீட்டின்படி,

**இக் கட்டுரை தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற் பிரிவு வெளியீட்டு வாரி த்தால் வெளியிடப்பட்டது.**

---

கற்பிப்பதிலும் சரி ஏனைய விடயங்களிலும் சரி மிகவும் பொறுப்பற்றவர்களாக இருக்கின்றனர். ஊழியர்களும் அவ்வாறே. மொத்தத்தில் பாடசாலையில் இவர்களை எல்லாம் கலைத்துவிட்டு புதிய நிர்வாக அமைப்பையே ஏற்படுத்த வேண்டும். ஏனெனில் இந்நிலை தொடர்ந்தால் பாடசாலையின் எதிர்காலம் மிகவும் பின்தள்ளப்படும்.

19-3-1990 திங்கட்கிழமை நான் எனது சகோதரியின் பாடசாலை விடுகைப் பத்திரம் எடுப்பதற்காக காலை சென்றிருந்தேன். அங்கு ஊழியர் ஒருவரிடம் இது சம்பந்மாக வினாவியபோது அவர் இதுபற்றி அறிவித்தல் பலகை (Notice Board)யில் போட்டிருப்பதாக கூறினார். அதன்படி அதில் விடுகைப்பத்திரமும் ஏனைய அத்தாட்சிப் பத்திரங்களும் பெறுபவர்கள் பாடசாலைவிட்ட பின்பு 2·00 மணிக்கு பின் வரும்படி எழுதப்பட்டிருந்தது. நான் அடுத்த நாள் 20-3-90 செவ்வாய்க்கிழமை 2·00மணிக்குச் சென்ற போது அறிவித்தல் பலகையைபார்த்தபோது அதிர்ச்சியடைந்தேன். அங்கு அறி

[illegible]

எமக்கு உடன் விடுகைப்பத்திரம் தேவை என கூறியும் தர மறுத்து விட்டார். பாருங்கள் நிர்வாகத்தை.

விடுகைப்பத்திரங்களும் அத்தாட்சி பத்திரங்களும் ஒருவருக்கு திடீரெனகூட தேவைப்படலாம். இதனை இவ்வாறு தள்ளிப் போடுவதனால் அங்கு படித்த மாணவர்களின்நிலை என்ன? நேர்முகப் பரீட்சைக்குப் போய் எமது பாடசாலையின் நிர்வாகத்தைப் பற்றி கூறினால் அவர்கள் ஏற்றுக்கொள்வார்களா? இதனால் எமக்கு எவ்வளவு பாதிப்பு யோசித்துப் பாருங்கள். இப்பத்திரங்களை உடன் எடுக்க உதவுவீர்களா?

இப்பாடசாலையில் எந்த தேவை வந்தாலும் அங்குள்ள எழுதுவினைஞர்களை அணுகி ஒரு காரியத்தை முடிப்பதற்குள் போதும் என்றாகிவிடும். இப்புகார் உண்மையா என அறிய அங்குள்ள மாணவர்களை விசாரித்துப்பாருங்கள்.

தயவுசெய்து எனது வேண்டுகோளை கருத்தில் கொண்டு இப்பாடசாலையில்உள்ள அதிபர், ஆசிரியர்கள், ஊழியர்கள் சகலரையும் பொறுப்பான நிலைக்கு மாற்றுவதுடன், மாணவர்கள் இனியாவது இவர்களின் அன்பான பண்பான செயற்பாடுகளை காண்பதற்கு வழிவிடுங்கள். எனது கடிதம் கிடைத்ததும் உடனே நடவடிக்கை எடுப்பீர்கள் என எதிர்பார்க்கிறேன்.

---

ஏறாவூரில்

# மின்சாரம் தன் சாரத்தை அடிக்கடி இழக்கின்றது

'ஈழநாதம்'
ஆசிரியர்

வெகு நாட்களாக ஏறாவூர் நகரில் மின்சாரம் திடீர் திடீரென தடைப்படுகின்றது

இதைப்பற்றி பிரதேச சபை காரியாலயத்தில் கேட்டால் அவர்கள் தரும் பதில் 'மின்சார சபையிடம் கேளுங்கள்' என்பதே.

மின்சார சபையுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு கேட்டால் அவர்கள் தரும் பதில் 'பிரதேச சபையில் கேளுங்கள்' என்பதே. சிலவேளைகளில் ஒரு பகுதியில் மின் விளக்கு எரியும். மற்றப் பகுதி இருளில் மூழ்கியிருக்கும். அப்போது போய்க்கேட்டால் அது பியுஸ் போயுள்ளது. மின்சார சபை ஊழியர்கள் தான்வந்து பழுது பார்க்க வேண்டும் என்கிறார்கள். ஆனால் மின்சாரக் கட்டணம் மாதா மாதம் ஒழுங்காக அறவிடப்படுகிறது. இந்தக் குறை பலகாலம் நிலவி வருகின்றது.

மக்கள் யாரிடம் கேட்பது என்று திண்டாடுகிறார்கள். இந்த மின்சாரத்தை நம்பி பல தொழிற்சாலைகள் இருக்கின்றன. அதில் முக்கியமாக அரிசி ஆலைகளே அதிகம்.

சில நாட்களில் பகல் நேரங்களிலும் மின்தடை ஏற்பட்டுவிடும். கேட்டால் வரும் பதில் 'மின்சார சபை நிறுத்தியிருக்கிறது' என்பதே. மின்சார சபையிடம் கேட்டால் அவர்கள் தரும் பதில் 'நாங்கள் நிறுத்தவில்லை உங்கள் பிரதேச சபையிடம் கேளுங்கள்' என்பதே. இதற்கு என்ன விமோசனம்?

**வி. எஸ். ஜே. ராஜன்**
ஏறாவூர்.

---

# ஆலயம் புனரமைப்பு

(கிளிநொச்சி)

பரந்தன் ஸ்ரீ ஞான வைரவர் ஆலயம் சுமார் ஐந்து இலட்சம் ரூபா செலவில் கட்டப்பட்டு வருகிறது.

இவ்வாலய கட்டிட வேலைகள் பொது மக்களின் உதவியுடனும், வர்த்தகர்களின் உதவியுடனும் 1988 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

இவ் ஆலய கட்டிடத்தைக் கட்டி முடிக்கப் போதிய நிதி இல்லாததால் சைவ அடியார்களின் உதவியை ஆலய பரிபாலன சபையினர் நாடுகின்றனர்.

---

# மக்கள் மடல்

எமது யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் சிலர் அங்கு கல்விகற்றுக் கொண்டே வேலையும் செய்கிறார்கள். இப்போதிருக்கும் சட்டப்படி அவ்வாறு செய்ய முடியாது. எமது நாட்டில் இன்று படித்து முடித்த பிள்ளைகளின் நிலையைத் தாங்கள் அறிந்திருப்பீர்கள். உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெற தகுதி பெற்றும் குறிப்பிட்ட சில எண்ணிக்கையினரே பல்கலைக்கழகத்திற்கு அனுமதிக்கப்படுகின்றனர். மற்றவர்கள் வேலை தேடும் பணியில் ஈடுபடுகிறார்கள். நிலை இவ்வாறிருக்க சில மாணவர்கள் பல்கலைக்கழகத்தில் படித்துக் கொண்டு வேலை பார்ப்பது எவ்வாறு பொருந்தும்? பல்கலைக்கழக அனுமதியில் எம்முடன் போட்டியிட்டு அனுமதி பெற்ற இவர்கள் எமது வேலை வாய்ப்புகளிலும் போட்டியிட்டு அந்த வாய்ப்பினையும் பெற்றால் எமது நிலை என்ன?

க. சுமதி

ஈழநாதம்

# இலங்கைத் தமிழரின் பாதுகாப்பு; இந்தியா சகல வழிகளிலும் முயலும்!

## இந்திய பாராளுமன்றத்தில் பிரதமர் வி. பி. சிங்

(புதுடில்லி)

இலங்கையிலுள்ள தமிழர்களது பாதுகாப்பை உறுதி செய்வதற்கு, இராஜ தந்திர நடவடிக்கை உட்பட எலலா வழியிலும் இந்தியா மேற்கொள்ளும் என்று இந்தியப் பிரதமர் திரு. வி. பி. சிங் கூறியிருக்கிறார். குடியரசுத் தலைவரின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது மானிலங்களின் அவையில் நடைபெற்ற விவாதங்களுக்குப் பதிலளிக்கும்வகையில் அவர் தொடர்ந்து நிகழ்த்திய உரையில் இவ்வாறு கூறினார்.

அமைதிப்படை இலங்கையில் இனிமேலும் தொடர்ந்து இருக்கவேண்டியதில்லை என இலங்கை கருதுவதினால், அமைதிப்படை விலகிக்கொள்ளப்பட்டது என்று அவர் கூறினார். இலங்கை அரசின் அழைப்பின்பேரிலே இந்தியப் படை அங்கு சென்றது என்பதையும் அங்கு நினைவுபடுத்தினார். இலங்கையிலுள்ள தமிழர்களின் பாதுகாப்புப்பற்றி இந்திய அரசுக்கு அக்கறையும் கவலையும் இருக்கின்றது. ஆயினும் அங்கு நிலைமை மிகவும் இருள் சூழ்ந்ததாக இருக்கவில்லை என நாம் கருதவேண்டியதில்லை எனப் பிரதமர் கூறினார். அமைதிப் படையினர் கடிமையான ஒரு பணியினைச் சிறப்பாகச் செய்திருக்கிறார்கள். தங்கள் பணியில் பெரும் தியாகங்கள் செய்து அவர்கள் திரும்பி வந்திருக்கிறார்கள். அமைதிப்படைவீரர்களை அரசு தகுந்த முறையில் கௌரவிக்கும் என்று திரு. வி. வி. சிங் கூறினார்.

இலங்கையிலிருந்து அமைதிப்படையை இந்தியா விலக்கிக்கொண்டிருப்பது இலங்கை அரசுடனும் மக்களுடனும் ஒத்துழைப்பதற்கான ஒரு புதிய சகாப்தத்தின தொடக்கமாக அமையும் மென்று வெளியுறவு அமைச்சர் ஐ. கே. குஜரால் கூறியிருக்கிறார். இலங்கைத் தமிழர்களின் நல் வாழ்வுபோன்ற பல பிரச்சினைகள் குறித்து மேலும் தொடர்ந்து கவனம் செலுத்தவேண்டியிருக்கு மென்று அவர் வெளிநாட்டுத் தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்த் பேட்டியில் கூறினார் இந்தப் பிராந்தியத்தில் அமைதியை மீண்டும் நிலை நிறுத்துவதற்கு எல்லா நடவடிக்கைகளையும் எடுப்டதாக இலங்கை அரசு உறுதிடளித்திருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

## மீண்டும் செஞ்சிலுவைச் சங்க தலைவராககலாநிதி தெய்வேந்திரன்

(வேலணை)

யாழ் மாவட்ட செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைவராக மீண்டும் வைத்திய கலாநிதி ஆர். தெய்வேந்திரன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

யாழ். புனித சம்பத்தரிசியார் கல்லூரியில் நடைபெற்ற யாழ். மாவட்ட செஞ்சிலுவைச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நேற்று முன்தினமான 25ஆம் திகதி (25-3-90) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றபோது இவர் சபையோர்களால் ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டார்

ஜெனிவாவில் உள்ள செஞ்சிலுவைச் சங்கத்தின் பிரதிநிதியான செல்வி. வின்னி அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டமையும் குறிப்பிடத்தக்கது. (14)

## கலாநிதி சிவபாதத்தின் நினைவுப் பேருரை

(யாழ்ப்பாணம்)

இந்திய இராணுவம் யாழ். வைத்திய சாலையில் மேற்கொண்ட தாக்குதலின் போது உயிர் நீத்த கலாநிதி எ. சிவபாதசுந்தரம் அவர்களின் நினைவுப் பேருரை நேற்று யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றது. இவ் வைபவத்திற்கு யாழ். மாவட்ட அரச உயர் அதிகாரிகள் உட்பட பல வைத்திய கலாநிதிகளும் பங்குபற்றி சிறப்பித்தனர். (லோ)

காப்புறுதிக் கூட்டுத்தாபனம்

## செயற்பாட்டை கிராமம்வரை விஸ்தரிக்க நடவடிக்கை

(கொழும்பு)

பத்து வருடச்சேவைகளைப் பூர்த்தி செய்யும் தேசிய காப்புறுதிக்கூட்டுத்தாபனம் அதன் சேவைகளை மேலும் விஸ்தரிக்க திட்டமிட்டிருக்கின்றது. உதவி அரசாங்க அதிபர் பிரிவு ரீதியாகக் காப்புறுதி முகவர்களை நியமிப்பதன் மூலம் இச் சேவை கிராமப் புறங்களுக்கு விஸ்தரிக்கப்படும். கூட்டுத்தாபனங்களின் பிரதான விஸ்தரிப்புத் திட்டங்களில் இதுவும் ஒன்றாகும்.

கூட்டுத் தாபனத்தின் தலைவர் வி. எஸ். பெரேரா தெரிவித்த தகவலின் படி சொத்தின் பெறுமதி 75 கோடி ரூபாவுக்கும் அதிகமானதாகும். கூட்டுத் தாபனத்தின் சகல ஊழியர்களும் பங்குத் தாரர்களாக இருககிறார்கள். தேசிய காப்புறுதிக் கூட்டுத்தாபனம் அதன் பத்தாண்டு சேவைப் பூர்த்தியைக் குறிக்குமுகமாக ஆயுள் காப்புறுதி செய்தவர்களுக்கு வெகுமதி அளிப்பதெனத் தீர்மானித்துள்ளது. புதிய ஆயுள் காப்புறுதித் திட்டம்விரைவில் அறிமுகம் செய்து வைக்கப்பட உள்ளது.

## யாழ். பாடசாலைகளில் தமிழ்மொழி மறுசீரமைப்பு

யாழ். மாவட்ட மாணவர்களுக்கு பாடசாலைகளில் தமிழ் மொழி மறுசீரமைப்பு பற்றி விளக்கங்களும் அதுபற்றிய புதிய எழுத்துக்களை அறிமுகப் படுத்துவகும் இரண்டாம் தவணை ஆரம்பத்திலிருந்து நடைமுறைக்கு கொண்டு வரப்பட உள்ளது என யாழ். கல்வித்திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (லோ)

## கமக்காரர் ஒய்வூதியத் திட்டத்தில் கணவனை இழந்தவர்க்கு உதவி

(யாழ்ப்பாணம்)

கமக்காரர் ஓய்வூதிய திட்டத்தின் கீழ் அண்மையில் இந்திய இராணுவ தாக்குதல்களில் கணவனை இழந்த தாழையடியைச் சேர்ந்த நமசிவாயம் கலாவதி என்பவருக்கு 25105/- இறப்பு நிதிக் கொடை வழங்கப்படவுள்ளது.

வடபகுதியில் முதன் முதல் இத்தகைய நிதிக்கொடை ஒறு ககத்தொழில் ஓய்வூதியதிட்டத்தின் கீழ் பெறுபவர் இவரே என யாழ் கமத்தொழில் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார், (லோ)

## முறைசாராக் கல்விப் பரீட்சை முற்போடப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

ஏப்ரல் மாதம் 8ம் 9ம் திகதிகளுக்கு முறைசாரக் கல்வி பரீட்சைகள் நடைபெறும் என முறைசாரா கல்வி அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார் இப்பரீட்சைகள் 9ம், 10ம் திகதிகளிலிருந்து முன் தள்ளப் படுட்ள்ளது குறிப்பிட தக்கது. (லோ)

## இலாப.....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

னியால் வாடுவதையும் வேலையற்றிருப்பதையும் என்றும் ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்று வலிகாமம் பகுதிப் பொறுப்பாளர் ஆஞ்சநேயர் தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ். மனோகரா திரையரங்கில் கடற்தொழிலாளா சங்க பிரதிநிதிகளின் மத்தியில் பேசுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது.

இந் நாட்டில் மீன்பிடித் தொழில் முக்கிய இடத்தில் உள்ளது. ஆகவே மீன்பிடித் தொழிலாளர்களின் ஒற்றுமை மிக இன்றியமையாதது. எமது கடற்தொழில் வளம்

## வேலணைகோட்டக்கல்விப்பகுதி மெய்வல்லுனர் போட்டி இன்று

(வேலணை)

வேலணை கோட்ட கல்வி அலுவலகத்துக்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுனர்போட்டிகள் இன்று (27 - 3 - 90) திகதி காலை ஊர்காவற்றுறை புனித அந்தோணியார் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற விருக்கின்றது.

வேலணை கோட்ட கல்வி நிலைய உதவிப் பணிப்பாளர் திரு. சி. புலேந்திரன் தலைமையில் நடைபெறவிருக்கும் இவ்விழாவில் யாழ். மாவட்ட கல்விப் பணிப்பாளர் செல்வி திலகவதி பெரியதம்பி பிரதம விருந்தினராக கலந்துகொள்கின்றார்.

வேலணை, ஊர்காவற்றுறை நெடுந்தீவு ஆகிய மூன்று உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள 68 பாடசாலைகள் இவ் விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றுகின்றன. (14)

## தபால்!).

(1ஆம்பக்கத் தொடர்ச்சி)

பந்தர் சிவராசசிங்கம் வேலணை பிரதம அஞ்சலகத்திற்கும் அஞ்சலக அதிபராக

## மாவிட்டபுரத்தில் உண்ணாவிரதமும் பொதுக்கூட்டமும்

## திரு லையில்....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கவர்ந்தது; அவர்களை எங்கள் பக்கம் ஈர்த்தது.

சித்தரித்துக் காட்டப்பட்ட சூழ்நிலைக்கு எதிர்மாறான சூழ்நிலை தான் திருக்கோணமலை மாவட்டத்தில் நிலவுகிறது. இங்கு தமிழ் சிங்கள முஸ்லிம் மக்கள் இணைந்து வாழ்கிறார்கள். முந்திய சம்பவங்கள் அர்த்தமற்ற அச்சத்தை மக்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளன. இந்த அச்சத்தைத் தீர்க்கும் மார்க்கம் அரசாங்கத்திடம்தான் உண்டு என்றார்.

24ம் திகதி காலைஇந்திய இராணுவத்தின் மிச்ச சொச்சங்களும் வெளியேறி விட்டனவே தொடந்தாற் போல் என்ன செய்ய உத்தேசம் என வினவியதுபோது

இப்போது சிவில் நிர்வாசாங்கஊழியர் குறைபாடுகள், தேவைகள் போன்றவற்றை வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநருக்கு எடுத்துச் சொல்லி தீர்வுகாணயோசித்துள்ளோம். எடுத்துக்காட்டாக திருக்கோணமலை இலங்கைப் போக்குவரத்துச் சபை டிப்போவில் 54 பஸ்கள் நின்றன. இந்த பஸ்களில் 14 பஸ்கள் ஓட முடியாதவை என்று கழித்து விடப்பட்டுள்ளன. எஞ்சிய 40 பஸ்களில் 19 பஸ்கள் தான் திருக்கோணமலை வீதிகளில் ஓடுகின்றன. ஆளுநர் நளின் செனிவரெத்னாவுடன் நாம் மேற்கொண்ட பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து ரூபா 3 லட்சம் நிதியைப் பெற்றுத் தந்துள்ளார். இந் நிதியைக் கொண்டு உதிரிப்பாகங்கள் வாங்கி மேலும் 6 பஸ்களை பாவனைக்கு விடவுள்ளோம்.

## அகிம்சையாலும் வெற்றி காணலாம் என உணர்த்தியுவர் அன்னை பூபதி

(வண்ணார்பண்ணை)

ஆயுதபலத்தால்மட்டுமல்ல அகிம்சையினாலும் வெற்றி காணலாமென எமக்கு உணர்த்தியவர் அன்னை பூபதி அவர்கள். அவரின் தியாகம் குறிப்பாக பெண்ணினத்திற்கு ஒரு உத்வேகத்தை அழித்துள்ளது இவ்வாறு யாழ்ப்பாணப்பகுதி பொறுப்பாளர் திரு. பொன் மாஸ்டர் வண்ணார்பண்ணை மக்களால் ஐயனார் கோவில் சனசமூக நிலைய முன்றலில் நடந்த அன்னை பூபதி கணபதிப்பிள்ளை அவர்களின் நினைவுதின எழுச்சிக் கூட்டத்தில் கலந்துகொண்டு கூறினார்.

லெப்டினன் கேணல் ராதாவின் தந்தை திரு. எஸ். கனகசபாபதி அவர்களின் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் யாழ். பல்கலைக்கழகத்தின் விடுதலைப் புலிகளின் மாணவர் அவையின் சார்பில் எஸ். சிவபாலன் பேசுகையில் அன்னை பூபதி அவர்களின் இரு கோரிக்கைகளையும் இந்திய அரசு ஏற்று நடந்திருந்தால் அவமானத்துடன் திரும்பிச் செல்லும் நிலை ஏற்பட்டிருக்காது எனக் கூறினார். இக்கூட்டத்தில் யாழ், பல்கலைக்கழகத்தின் விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்புத் தலைவர் மோகன், சென்

## உண்ணா விரதமும் பொதுக்கூட்டமும்

அன்னை பூபதியின் இரண்டாவது நினைவு தினத்தையொட்டி நாளை காலை 8-00 மணிக்கு அரியாலை அமர

திகதிகளிலிருந்து முன் தள்ளப் படுட்ள்ளது குறிப்பிட தக்கது. (லோ)

## இலாப.....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

னியால் வாடுவதையும் வேலையற்றிருப்பதையும் என்றும் ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்று வலிகாமம் பகுதிப் பொறுப்பாளர் ஆஞ்சநேயர் தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ். மனோகரா தியேரயரங்கில் கடற்தொழிலாளர் சங்க பிரதிநிதிகளின் மத்தியில் பேசுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது.

இந் நாட்டில் மீன்பிடித் தொழில் முக்கிய இடத்தில் உள்ளது. ஆகவே மீன்பிடித் தொழிலாளர்களின் ஒற்றுமை மிக இன்றியமையாதது. எமது கடற்தொழில் வளம் பெருகவேண்டும். மீன்பிடித் தொழிலாளர் மத்தியில் என்றும் மோதல்களோ அன்றி வேற்றுமைகளோ ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என்றார்.

கடற்தொழில் புரிபவர்களில் வலை வீசி மீன் பிடிப்பவர்களுக்கும் மடித்தொழில் எனப்படும் சங்கிலியில் பிணைக்கப்பட்ட வலைகளால் மீன் பிடிப்பவர்களுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள சச்சரவுகளைத் தீர்த்துவைக்கும் நோக்குடன் இக் கலந்துரையாடல் மீன்பிடித் தொழிலாளர்களுடன் செய்யப்பட்டது.

இதில் ரோலரினால் மீன் பிடிதொழில் செய்வோரினால் இந்த மீன்பிடித் தொழில் பாதிப்புடன் எதிர்கால மீன்பிடிவளம் குறைவதால் இவர்களுடைய தொழில் நிறுத்தி வைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது. மீண்டும் கடற்தொழில் விரிவாக்க உத்தியோகஸ்தருடன் இதுபற்றி ஆலோசனை செய்யப்பட்டு வரும் ஞாயிற்றுக்கிழமை மடித்தொழில் புரிவோருக்கு நல்ல ஒரு மாற்று வழி தெரிவிக்கப்படும் என்று தீர்மானிக்கப்பட்டது. (லோ)

## எரிபொருளைச்,...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தாபன தலைமை அதிகாரி தெரிவித்துள்ளார்.

ஐந்து வருடங்களுக்கு மேலாக எமது கூட்டுத்தாபனத்தில் கொள்கலன்கள் பாவனைக்கு ஏற்ற முறையில் இல்லை, தற்போதுதான் நாம் இக் கொள்கலன்களை திருத்துவதற்கான நடவடிக்கை எடுத்துள்ளோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (லோ)

## மெய்வல்லுனர் போட்டி இன்று

(வேலணை)

வேலணை கோட்ட கல்வி அலுவலகத்துக்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுனர்போட்டிகள் இன்று (27 - 3 - 90) திகதி காலை ஊர்காவற்றுறை புனித அந்தோணியார் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற விருக்கின்றது.

வேலணை கோட்ட கல்வி நிலைய உதவிப் டணிப்பாளர் திரு. சி. புலேந்திரன் தலைமையில் நடைபெறவிருக்கும் இவ்விழாவில் யாழ். மாவட்ட கல்விப் பணிப்பாளர் செல்வி திலகவதி பெரியதம்பி பிரதம விருந்தினராக கலந்துகொள்கின்றார்.

வேலணை, ஊர்காவற்றுறை நெடுந்தீவு ஆகிய மூன்று உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள 68 பாடசாலைகள் இவ் விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றுகின்றன. (14)

## தபால்!).

(1ஆம்பக்கத் தொடர்ச்சி)

பந்தர் சிவராசசிங்கம் வேலணை பிரதம அஞ்சலகத்திற்கும் அஞ்சலக அதிபராக இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளனர்.

வேலணை அஞ்சலகத்தில் உதவி அஞ்சலக அதிபராகக் கடமையாற்றிய திரு. சி. த. மகாலிங்கம் ஊர்காவற்றுறை அஞ்சலகத்திற்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார் (14)

## இந்திய இராணுவம்,..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி

இந்திய இராணுவம் நமது நாட்டைவிட்டு வெளியேறியது தற்செயலான செயலல்ல இந்திய இராணுவத்திற்கு தமிழ் பேசும் மக்கள் மத்தியில் எழுந்த எதிர்ப்பும் அதன் தாக்குதல் முனையாக தமிழீழ விடுதலைப் புலிகள் தொடுத்த எதிர்த்தாக்குதலும், சிங்கள மக்களின் குமுறல்களால் பிரேமதாஸா அரசு கொடுத்த நெருக்குதல்களும், சர்வதேச ரீதியில் உருவாகி வளர்ந்த கண்டனங்களும் இந்திய மக்களிடம் காணப்பட்ட அதிருப்தியுமே இந்திய இராணுவத்தின் வெளியேற்றத்துக்கான காரணங்களாகும்— இவ்வாறு அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மாவிட்டபுரத்தில் உண்ணாவிரதமும் பொதுக்கூட்டமும்

(மாவிட்டபுரம்)

அன்னை பூபதியின் நினைவாக இன்று காலை 6 மணிவரையும் அடையாள உண்ணாவிரதமும், பொதுக்கூட்டமும் கலை நிகழ்ச்சியும், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலடியில் நடைபெறும்.

உண்ணா விரதத்தின்முடிவிலே கலாச்சாரப் பிரிவினது ''நடந்து வந்த பாதை'' என்ற வில்லிசையும், ''விடியலை நோக்கி'' என்ற நாடகமும் நடைபெறும்.

## நகருக்குள்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

திரு ஜேமஸ் கடற் படைச் சிப்பாய்களின் அதிகாரிகளுடன் அவர்கள் ஆயுதம் தாங்கியபடி நகருக்குள் பிரவேசித்ததுபற்றிப் பேசினார் இதன் பின் கடற்படையினரும், இரண்டு இராணுவத்தினரும் அங்கிருந்து திருப்பிச் சென்றனர்,

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கவர்ந்தது; அவர்களை எங்கள் பக்கம் ஈர்த்தது.

சித்தரித்துக் காட்டப்பட்ட சூழ்நிலைக்கு எதிர்மாறான சூழ்நிலைதான் திருக்கோணமலை மாவட்டத்தில் நிலவுகிறது. இங்கு தமிழ் சிங்கள முஸ்லிம் மக்கள் இணைந்து வாழ்கிறார்கள். முந்திய சம்பவங்கள் அர்த்தமற்ற அச்சத்தை மக்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளன. இந்த அச்சத்தைத் தீர்க்கும் மார்க்கம் அரசாங்கத்திடம்தான் உண்டு என்றார்.

24ம் திகதி காலைஇந்திய இராணுவத்தின் மிச்ச சொச்சங்களும் வெளியேறி விட்டனவே தொடந்தாற் போல் என்ன செய்ய உத்தேசம் என வினவியதுபோது

இப்போது சிவில் நிர்வாகத்தை அமுல் படுத்துவதற்கான இடையூறுகள் முற்றாக அகன்று விட்டன. முன்பெல்லாம் சிவில் நிர்வாகத்தை ஒருவாறு இயக்கி வந்தோம் இனித்திட்டமிட்டு இயங்கவுள்ளோம். முதல் கட்ட வேலையாக சில குறைபாடுகளை நிவர்த்தி செய்ய வேண்டியுள்ளது. வேலை நேரங்கள், அரசாங்கஊழியர் குறைபாடுகள், தேவைகள் போன்றவற்றை வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநருக்கு எடுத்துச் சொல்லி தீர்வுகாணயோசித்துள்ளோம். எடுத்துக்காட்டாக திருக்கோணமலை இலங்கைப் போக்குவரத்துச் சபை டிப்போவில் 54 பஸ்கள் நின்றன. இந்த பஸ்களில் 14 பஸ்கள் ஓட முடியாதவை என்று கழித்து விடப்பட்டுள்ளன. எஞ்சிய 40 பஸ்களில் 19 பஸ்கள் தான் திருக்கோணமலை வீதிகளில் ஓடுகின்றன. ஆளுநர் நளின் செனிவரெத்னாவுடன் நாம் மேற்கொண்ட பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து ரூபா 3 லட்சம் நிதியைப் பெற்றுத் தந்துள்ளார். இந்நிதியைக் கொண்டு உதிரிப்பாகங்கள் வாங்கி மேலும் 6 பஸ்களை பாவனைக்கு விடவுள்ளோம். மற்ற நிறுவன சேவைகளையும்படிப்படியாகச் சீரமைக்கவுள்ளோம்.

மற்ற மாவட்டங்களைப் போல் திருக்கோணமலையில் மாற்றங்களை உடனடியாகக் கொண்டு வர முடியாது. திருக்கோணமலை மாவட்டம் அலாதியான குணவிசேடங்களைச் கொண்டது.

## கஜானாவில் காசில்லை நிர்வாகத்தில் சீர்கேடுகள்

மாகாண அரசு நிர்வாகத்தில் சில வேலைகளைச் செய்துள்ளார்கள். அது என்னவெனில் சிறுபான்மையினரான தமது ஆதரவாளர்களுக்கு உதவியுள்ளார்கள்.

எந்த அமைச்சிலும் பணமில்லை. சூறையாடல்கள்தான் அதிகமாக நடந்திருக்கிறது. பொதுநலச் சேவைகள் கூட நடைபெறவில்லை. திருகோணமலை மாவட்டத்தில் சில கிராமங்களில் வீதிகளே இல்லை. மூதூரின் நிலை படுமோசம். அத்துமீறிய குடியேற்றங்களைக் கூட இவர்கள் பார்த்துக் கொண்டிருந்தனர். குடியேற்றங்களைத் தடுக்க இவர்கள் எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல் ஏனோ தானோ என்று இருந்துவிட்டனர்.

## செயலாளர்களை விரட்டவில்லை!

செயலாளர்களை நாங்கள் விரட்டவில்லை. செயலாளர்களில் பிழை இருந்த படியால்த்தான் அவர்கள் எங்கேயோ கிளம்பிவிட்டார்கள் அவர்களை ஒருவரும் விரட்டவில்லை. பிழை இல்லாவிட்டால் கடமைக்கு வந்து தொடர்ந்தும் வேலைகளைப் பாரமேற்று நடத்தியிருப்பார்கள். எப்படியாவது நிர்வாகம் குலையக் கூடாது. ஆளுநர் தனது அதிகாரத்தைப் பாவித்துப் புதிய செயலாளர்களை நியமித்துள்ளார்.

திருக்கோணமலையில் முஸ்லிம்-தமிழர் ஐக்கியம் எவ்வாறு உள்ளது என வினவியபோது தமிழ்-முஸ்லிம் அன்நியோன்னியமும் ஐக்கியமும்திருக்கோணமலையில் சிறப்பாக இருந்து வந்திருக்கிறது. இப்போது ஐக்கியம் மேலும் நெருக்கி வளர்ந்து வருகிறது. கச்சேரியில் வேலை செய்யும் தமிழர்கள் கோட்டைக்குள் செல்லலாமா? எனக் கேட்டதற்கு இரண்டு வருடங்களுக்கு மேலாகச் சிங்கள அகதிகள் அங்கு வாழ்ந்துவருகிறார்கள். அவர்களுக்கு மாற்று ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும். இதேவேளை தமிழ் அரசாங்க ஊழியருக்குப் போதிய பாதுகாப்பு வழங்குவதாக ஆளுநர் நளின் செனிவரெத்னா உறுதியுரை வழங்கியுள்ளார். அகதிச் சிங்களவர் பலர் மத்தியில் ஒரு மனமாற்றம் காணப்படுகிறது. அவர்களும் புரிந்துணர்வுடன் நடந்துகொள்ள விரும்புகிறார்கள். தமிழர், சிங்களவர் - இரு தரப்பினர் மனோநிலையும் பாதிக்கப்பட்டது என்பது உண்மைதான்.

## திருமலை பஸ் சேவை சீரமைப்பு, புலிகள் பேச்சு!

(திருக்கோணமலை)

திருக்கோணமலை மாவட்டத்தில் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பஸ் போக்குவரத்துச் சேவைகளை விஸ்தரிப்பது சம்பந்தமாகவும் சீர்திருத்துவது சம்பந்தமாகவும் மூதூர் பகுதிச் சேவைகளை சீர்செய்வது பற்றியும் விடுதலைப் புலிகளுக்கும் போக்குவரத்துச் சபை பிராந்தியத் தலைவருக்குமிடையில் நேற்றுப் பேச்சுவார்த்தை நடைபெற்றது.

இப்பேச்சுவார்த்தைகளில் விடுதலைப் புலிகளின் திருமலை அரசியல் பொறுப்பாளர் திரு. றூபனும் இ. போ. சபைப்பிரதேசத் தலைவரும் மற்றும் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

## ...என உணர்த்தியவர் அன்னை பூபதி

(வண்ணார்பண்ணை)

ஆயுதபலத்தால்மட்டுமல்ல அகிம்சையினாலும் வெற்றி காணலாமென எமக்கு உணர்த்தியவர் அன்னை பூபதி அவர்கள். அவரின் தியாகம் குறிப்பாக பெண்ணினத்திற்கு ஒரு உத்வேகத்தை அழித்துள்ளது இவ்வாறு யாழ்ப்பாணப் பகுதி பொறுப்பாளர் திரு. பொன் மாஸ்டர் வண்ணார்பண்ணை மக்களால் ஐயனார் கோவில் சனசமூக நிலைய முன்றலில் நடந்த அன்னை பூபதி கணபதிப்பிள்ளை அவர்களின் நினைவுதின எழுச்சிக் கூட்டத்தில் கலந்துகொண்டு கூறினார்.

லெப்டினன் கேணல் ராதாவின் தந்தை திரு. எஸ். கனகசபாபதி அவர்களின் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் யாழ். பல்கலைக்கழகத்தின் விடுதலைப் புலிகளின் மாணவர் அவையின் சார்பில் எஸ். சிவபாலன் பேசுகையில் அன்னை பூபதி அவர்களின் இரு கோரிக்கைகளையும் இந்திய அரசு ஏற்று நடந்திருந்தால் அவமானத்துடன் திரும்பிச் செல்லும் நிலை ஏற்பட்டிருக்காது எனக் கூறினார். இக்கூட்டத்தில் யாழ், பல்கலைக்கழகத்தின் விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்புத் தலைவர் மோகன், சென்னைப் பல்கலைக்கழக மாணவன் மதி, மக்கள் முன்னணியைச் சேர்ந்த திரு. க. செல்வநாயகம், திரு. இராசநாயகம் மக்கள் சார்பில் திரு. எம். கிருஷ்ணசாமி திரு, ப. வசந்தகுமார், தா. கனகராசா என். லெட்சுமணசர்மா ஆகியோர் கலந்து கொண்டனர். (45)

## உண்ணா விரதமும் பொதுக்கூட்டமும்

அன்னை பூபதியின் இரண்டாவது நினைவு தினத்தையொட்டி நாளை காலை 8-00 மணிக்கு அரியாலை அமரகலா சனசமூக நிலையத்தின் முன்றலில் உண்ணாவிரதம் ஒன்று நடைபெறவுள்ளது. இவ் உண்ணாவிரத முடிவின்போது பொதுக் கூட்டம் ஒன்று நடைபெறவுள்ளது. இதில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியைச் சேர்ந்த தலைவர்கள் கலந்துகொள்வார்கள் எனத் தெரியவருகின்றது.


## 4-ம் ஆண்டு நினைவாஞ்சலி

| சிருஷ்டிப்பு | | அழிப்பு |
|---|---|---|
| 27 |  | 21 |
| -- | | -- |
| 03 | | 03 |
| -- | | -- |
| 84 | | 86 |
| ★ | | ★ |

### ஆர். லாலா சிவகுமாரன்

ஆள நினைத்தவன் அழிப்பில்

இழந்த தம்பிகள் பலர்! அக்டோபர் அனர்த்தத்துடன் ஆரம்பித்த அன்ஸியன் அழித்தொழிப்பில் இழந்த தம்பிகளின் இன்னுயிர்களோ எண்ணில. அந்தத் ''தம்பியின்'' தளரா முயற்சியின் பலனோ!

தமிழீழ பிராந்தியமனைத்திலும் புலிக் கொடியோ, பறந்து மண்ணுக்காய் அழிக்கப்பட்ட உங்களுக்கு மௌனாஞ்சலி செய்கின்றது.

50/25 வைரவர் கோவில் ஒழுங்கை
கொட்டடி.

(R/47



இப்பத்திரிகை யாழ்ப்பாணம், வைமன் வீதி, 31-ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 27-ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப் பெற்றது